நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 05 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 07 (20.12.2004) திங்கட்கிழமை இதழ்:81

இணைந்து விட்டீர்களா?
நிலவு .com in
யாழ் Online
275, யாழ். வீதி,
மானிப்பாய்.
T.P.0777 740413

# அரசின் யுத்த முனைப்பை கண்டித்து மக்கள் போராட்டங்களுக்கு ஏற்பாடு!

## இன்று சாவகச்சேரி நகரில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கம் மேற்கொண்டுவரும் யுத்த முனைப்புகளைக் கண்டித்தும் சமாதான வழிமுறை மூலம் பிரச்சினையைத் தீர்க்க - விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அதிகார சபையின் அடிப்படையில் அரசாங்கம் பேச்சுக்கு முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தியும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் இன்றுமுதல் முன்னெடுக்கப்படவுள்ளன.**

**இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் முதற் கட்டமாக இந்த வாரம் தென்மராட்சியில் மூன்று இடங்களில் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன. இதில் முதலாவது போராட்டம் இன்று சாவகச்சேரியில் இடம்பெறவுள்ளது.**

இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போராட்டத்தில் பொதுமக்களும், வர்த்தகர்களும் அரச அலுவலர்களும் தமது நிறுவனங்களின் முன்பாக அரசாங்கத்தின் யுத்த முனைப்பைக் கண்டித்தும், சமாதானத்தை வலியுறுத்தியும் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு வீதி ஓரமாக போராட்டத்தில் ஈடுபட்ட பின்னர் காலை 10.30 மணியளவில் சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தின் முன் ஒன்று கூடி சமாதானத்தை வலியுறுத்தும் கூட்டம் ஒன்றில் பங்குகொள்ளவுள்ளனர். இதன்போது தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஒன்றியத்தால் ஜனாதிபதிக்கான மகஜர் சாவகச்சேரி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் ஊடாக அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இவ்வாறான நிகழ்வுகள் எதிர்வரும் புதன்கிழமை கைதடியிலும் வெள்ளிக்கிழமை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மேல்மாகாணத்தில் நேற்று பரவலான நிலஅதிர்வுகள்!

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் நேற்று பரவலாக நில அதிர்வு ஏற்பட்டது. எனினும், இந்தச்சம்பவத்தின் பாதிப்புகள் குறித்துத் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

நேற்றுக்காலை 11.20 மணியளவில் நிட்டம்புவ, நீர்கொழும்பு, மினுவாங்கொட, ஜா-எல,கம்பஹா,மாலபே மற்றும் வெள்ளவத்தை ஆகிய இடங்களிலேயே இந்தப் நிலஅதிர்வு உணரப்பட்டுள்ளது. இதேவேளை நில அதிர்வின் ரிக்டர் அளவை கணிப்பிடுவதற்கான நிலையம் நேற்று விடுமுறை காரணமாக மூடப்பட்டிருந்ததால் அதனைத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த நிலையில், இது தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் உதயனி பண்டாரவை கருத்துத் தெரிவிக்கையில் -

இலங்கையின் நிலப்பரப்புக்குள் நில அதிர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.

அதாவது இலங்கையின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூரில் கடத்தப்பட்ட சிறுமிகள் அல்லைப்பிட்டியில் மீட்கப்பட்டனர் !

### வெள்ளை வானில் வந்தோர் கைவரிசை

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்கள் நான்கு சிறுமிகளைக் கடத்திச் சென்றபோது, அல்லைப்பிட்டிப் பகுதியில் உறவினர் ஒருவர் வாகனத்தை இடைமறித்ததால் சிறுமிகளை இறக்கிவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புத்தூர்ச் சந்திக்கு அண்மையாக மாலை 3.00 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 வயதான இரட்டைச் சகோதரிகளும், 6 மற்றும் 9 வயதான இரண்டு சிறுவர்களும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தனர். அந்தவேளை வெள்ளை வானில் வந்த நபர்கள் உங்களின் அம்மாவைத் தெரியும், அப்பாவைத் தெரியும், எனச் சொல்லி ஏமாற்றிவீட்டிற்குக் கொண்டு செல்வதாகக் கூறி கடத்திச் சென்றனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வான் அல்லைப்பிட்டி பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது, வானில ஓரமாக இருந்த சிறுமிகள் தங்களின் உறவினர் ஒருவர் வருவதைக் கண்டு பெயர் சொல்லிக் கூச்சலிட்டனர் இதனை அடுத்து 4 சிறுமிகளையும் வாகனத்தில் இருந்து இறக்கிவிட்டு விட்டு கடத்தி வந்தவர்கள் தப்பிச் சென்றனர்.

இதனை அடுத்து குறித்த உறவினரின் உதவியுடன் நான்கு சிறுமிகளும் தமது வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடமும், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற் (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை அபிவிருத்தி குறித்து

# அரச திணைக்கள அதிகாரிகளுடன் விடுதலைப் புலிகள் நேற்று சந்திப்பு




(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி, புனரமைப்பு வேலைத் திட்டம் குறித்த ஆய்வுப் பட்டறை ஒன்று நேற்று கட்டைப்பறிச்சான் விபுலானந்த வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுப்பட்டறையில் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் கரிகாலன், கல்விக்கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், திட்டமிடல் பணிப்பாளர் தூயவன், சுகாதாரசேவைகள் பொறுப்பாளர் அருண், நிர்வாகப் பொறுப்பாளர் சின்னப்பா மாஸ்ரர், திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோரும் -

வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா, நிகொட் மாகாண திட்டப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிநாடுகளுக்கு இனிமேல் படைகளை அனுப்பமுடியாது!



## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இருபது வருடங்களாகப் போராடியும் உள்நாட்டில் அமைதியைப் பேணமுடியாத நிலையிலுள்ள இலங்கைப் படைகளை, வெளிநாட்டில் அமைதியை நிலைநாட்டும் பணிக்கு அனுப்புவதால் எந்தப் பயனும் இல்லை.

எனவே இலங்கை இராணுவத்தை வெளிநாடுகளுக்கு அமைதிகாப்புப் படைகளாக அனுப்பப்போவதில்லை என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் யுத்தபீதி ஏற்பட்டிருக்கிறது. புலிகள் தம்மை ஆயுதவள ரீதியிலும் ஆளணி வள ரீதியிலும் பாரியளவில் வலுப்படுத்தியுள்ளனர்.

எந்தநேரம் யுத்தம் வெடித்தாலும் அதை எதிர்கொள்வதற்கு ஏற்றவகையில் அவர்கள் தயார் நிலையில் உள்ளனர். ஆனால் அரசாங்கமோ படைகளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்றம் - பொலிஸ் - இராணுவம் முறையாக இயங்காததால் நாடு சீரழிந்துபோயுள்ளது!

## சந்திரிகா மீளவும் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்கும் நிறுவனங்கள் முறையாக இயங்காத காரணத்தால்தான், நாட்டை முன்னேற்ற முடியாதுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கண்டியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியொன்றை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசும்போது -

ஜனாதிபதி என்ற ரீதியில் இந்த விடயம் தொடர்பாக நான் முன்பு கதைத்தபோது, என் மீது (12 ஆம் பக்கம் பார்க்க)



## உடுப்பிட்டி பல.நோ.கூ.சங்கம் (வ/து)

## வெற்றுப் பொருட்களுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

எமது சங்கத்தில் உள்ள கீழ்வரும் தொகையான வெற்றுச்சாக்கு, வெற்றுப்பைகளை விற்பனை செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப் படுகின்றது.

| | | |
|---|---|---|
| 50 கிலோ கொள்ளை சாக்கு | - | 370 தனி |
| நவதானிய சாக்கு | - | 150 தனி |
| கழிவு சாக்கு | - | 55 தனி |
| மா பை | - | 4830 தனி |
| ஏனைய பை | - | 11955 தனி |
| கழிவு பை | - | 470 தனி |

சங்கத்தில் வழங்கப்படும் படிவத்தில் மேற்குறிப்பிட்டவற்றுக்கான விலைகளைக் குறித்து 24.12.2004 இற்கு முன்னர் சங்கத்தில் சமர்ப் பிக்கவும்.

28.12.2004 ஆந்திகதி பிற்பகல் 12.30 மணிக்கு கேள்விப்பத் திரங்கள் பிரித்து பரிசீலிக்கப்படும். கேள்விப்பத்திரத்தில் 1, 2, 3 கழிவு என்றவாறு விலைகள் அமைவதோடு, முழுப்பொருட்களுக்கும் கேள்வி கோரப்படவேண்டும்.

பொது முகாமையாளர்,
உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்,
உடுப்பிட்டி.

C/3494


## ஒப்பந்தகாரர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மின் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த மின்சாரசபை ஒப்பந் தகாரர் ஒருவர் மாடிக்கட்டடத்தி லிருந்து தவறி விழுந்து படுகாய மடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை வடிவேலு (வயது 36) என்பவரே காயமடைந்தவராவார்.

வைத்தியசாலையில் மின்னி ணைப்பு வேலைகள் செய்து கொண்டிருந்தவேளை தவறி விழுந்தபோதே இவர் காயமடைந் ததாகத் தெரியவருகிறது. (12)


**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், லைலா, வடிவேல் நடித்த



**ஜெய் சூர்யா**

கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின் காடன் – 326, K.K.S.றோட் யாழ்ப்பாணம்


## குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள்

புலோலி தெற்கு சாரையடி வீரபத்திரர் ஆலய மருங்கிலுள்ள சிவகுலசிங்கம் ஞாபகார்த்த அறிவாலயத்தில் ஏற்கனவே கண்பரிசோதனை செய்தவர்களில் 35 பேருக்கு குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட வுள்ளன.

கண்ணில் குறைபாடுள்ளவர்க ளுக்காக அண்மையில் இந்த அறி வாலயத்தில் நடத்தப்பட்ட கண் பரிசோதனை முகாமில் 85 பேரு க்கு இலவசமாக கண்பரிசோதனை செய்யப்பட்டது. இதன்போது கண் பார்வை குறைவான 35 பேருக்கு குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (14)

## வீதி திருத்த வேலைக்கு நிதி ஒதுக்கீடு

20 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் குழியு மாக இருந்து வந்த சங்கானை ஓடக்கரை வீதியை திருத்துவதற் கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இதற்கென சுமார் 2 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட இந்த வீதித் திருத்தத்திற்கென பதினெட்டு லட் சம் வலிமேற்கு பிரதேச செயலகத் தால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வீதித் திருத்த வேலைகளை சங் கானை தெற்கு கிராம அபிவி ருத்திச் சங்கத்தினர் மேற்கொண் டுள்ளனர். (48)

## கழகங்களுக்கான கலந்துரையாடல்

வலிவடக்கு பிரதேச சபைக்குட் பட்ட பதிவு செய்யப்பட்ட விளை யாட்டு கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 1.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் 2005 ஆம் ஆண்டு நடை பெற இருக்கும் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான கலந்துரை யாடல் மேற்கொள்ள இருப்பதால் தலைவர், செயலாளர், ஆகியோரை சமுகமளிக்குமாறு பிரதேச செயலா ளர் தெரிவித்தார்.


**நிறஞ்சனாஸ்** சங்கானை

ஸ்ரீகாந், சினேகா, நடித்த

**போஸ்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK - 3

**ராஜா** யாழ்ப்பாணம்.

இன்று மட்டும் சரத்குமார், வடிவேல் நடித்த **சத்ரபதி** (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30 மட்டும்
நாளை முதல்
சிம்பு (இருவேடம்), ஜோதிகா நடித்த
**மன்மதன்**

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

விக்ரம், கிரண், மனோரமா நடித்த (குளிரூட்டப்பட்டது)
**ஜெமினி** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30,6.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 (பு.நே) மட்டும்
THE MUMMY RETURNS ஆங்கிலப் படம்
விரைவில்:- THE PASSION OF THE CHRIST
(இயேசு தேவரின் வாழ்வின் இறுதி 12 மணிநேரக் கதை.)



## ஆறாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
23
10
1948



உதிர்வு
27
12
1998

திதி: பூர்வபட்ச நவமி 20.12.2004

அமரர்

**திருமதி கந்துபுஸ்பதேவி அமரசிங்கம்**

(ஆசிரியை)

காலங்கள் நில்லாதோடிக்
கரைந்தாலும் அன்னையுன்றன்
கோலங்கள் கரையாதெங்கள்
கண்ணீரால் காப்போம் வாழ்வின்
மூலங்கள் அறிவோம் மண்ணில்
மலர்ந்தவை மறையும் அன்புப்
பாலங்கள் அமைத்துக் காத்த
பண்பென்றும் மறைவதில்லை
சீலங்கள் பெண்ணாய்வந்த
செல்வமே உயிரேயெம்மை
வாழுங்கள் என்றுவானில்
வளர்கின்ற ஒளியே வாழும்
காலங்கள் எல்லாம் நின்னைக்
கண்மூடித் துதித்தே வாழ்வோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
கணவன், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை

பன்னாலை,
தெல்லிப்பளை.

(c/3495)



## Patrician Institutes

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

எதிர்வரும் 21/12/04 (செவ்வாய்க்கிழமை) 2003/2004 காலப்பகுதியில் தொழிற்பயிற்சிகளை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையி னால் வழங்கப்படும் என்பதனை அனைத்து மாணவர்களுக் கும் அறியத்தருகின்றோம். அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

| | | |
|---|---|---|
| இடம் | - | "அகவொளி மண்டபம்" (St. Patrick's Road) |
| காலம் | - | 21. 12. 2004. |
| நேரம் | - | காலை 9.00 மணி. |

பயிற்சியை முடித்த மாணவர்களுக்கு தனிப்பட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது, கிடைக்கப் பெறாத வர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

–நன்றி–

பதிவாளர் (C/3491)

இல. 59, சென்பற்றிக்ஸ் றோட், யாழ்ப்பாணம்.



## UNIT

யாவும் கொழும்பை ஒத்த விலையில்

இந்திய பொறியியலாளர்களின் மேற்பார்வையில்

**UNI MULTIMED**
Intel 2.4 GHz processor,
AsRock Intel 845 Chipset Motherboard,
128 MB DDR-RAM, 40 GB HDD 7200 RPM,
52X CDROM,
Enhanced Scroll Mouse,
49,900/=

**UNI ULTRA - SATA COMPLETE**
Intel P4 3.0 GHz Hypher thread Processor,
AsRock 800 FSB Intel 865 Chipset Motherboard,
512 MB DDR-RAM,
120 GB 1.5 GBPS SATA Hard Disk,
Higher End 800 Dpi Optical Mouse,
16X Sony DVD ROM, 52X Sony CD- RW,
128MB 8X AGPVGA with TV-Out,
Creative 7.1 Sorrounded Line Sound blaster,
Higher-End Latest Pixelview TV Tuner,
109,900/=

ALL SYSTEM WITH WORLD'S NO1 DELL MONITOR

**UNI ULTRA - SATA EXPERT**
Intel P4 3.0 GHz Hypher thread Processor.
AsRock 800 FSB Intel 865 Chipset Motherboard,
512 MB DDR-RAM, 64MB 8X AGPVGA Setup
80 GB 1.5 GBPS SATA Hard Disk,
Higher End 800Dpi Optical Mouse,
16 X Sony DVD ROM,
52X Sony CD- RW,
89,900/=

OFFER

**UNI DEV EXPERT**
Intel P4 2.4 GHz Hypher Thread processor,
ASROCK 800 FSB,
256 MB DDR-RAM, 80 GB 7200 RPM HDD,
16X Sony DVD ROM/52X Sony CD-RW
Enhanced scroll Optical Mouse.
64MB 8X AGPVGA Setup.
66900/=

Free..!
GEEPAS 5.1
3800W HI-FI Woofer
OFFER

Free..!
Higher End
Auto Shutdown UPS.
Hi-quality2.1 Higher-End Woofer.
Screen Filter.Mouse Pad . Dust Cover.& /etc

X-MAS & NYEAR MEGA OFFER

**All System With......!**
- All Mother Board are Hyper Thread Supported
- Fashioned ATX Casing Along with Front USB and Sound
- 5.1 Channell Surround Sound System
- Enhanced Multimedia Keyboard
- All System With 1024 Cache Memory
- 8X AGPVGA, 8XUSB 2.0 ports
- 100 Mbps Fast Ethernet NIC

சகல உதிரிகளுக்கும் 3 வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன்

347, K.K.S. Road, Manohara Theatre Junction,
OFFER Jaffna, Sri Lanka. OFFER
MOB:- 077 3134737,077 3134725,077 6093477.

யூபர்கள் 1500 ரூபா முதல்
தரம் சிறந்ததால்தான் 3 வருட உத்தரவாதம்

# நாட்டில் மீண்டுமொரு யுத்தமா? அரசே முடிவெடுக்கவேண்டும்!

## திருமலையில் எழிலன்



மீண்டுமொரு போர் உருவாகுமானால் இலங்கை என்றொரு நாடு எதிர்காலத்தில் கேள்விக்குறியாகவே இருக்கும். இதுபற்றி அரசாங்கமே முடிவுவெடுக்க வேண்டும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் இயங்கும் அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் இணைக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு சமூக சேவைகள் நிலையத்தில் நடைபெற்றது. இதில் அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் கலந்துகொண்டார்.

இணையத்தின் உப தலைவர் திருமதி ர.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நக்கூட்டத்தில் சி.எழிலன் தொடர்ந்து உரையாற்றுகையில் -

எங்களுடைய பணி மக்களுக்கு சேவை செய்வதே. நாங்கள் போராளிகளாக இருந்துகொண்டு மக்களுக்குச் சேவையாற்றுகிறோம். நீங்களும் அதுபோன்று மக்களுக்காக - மக்களோடு மக்களாக நின்று சேவையாற்ற வேண்டும்.

எமது மக்கள் கடந்த சில நாட்களாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நிவாரணங்கள் பெரிதாக இருக்க வேண்டும். ஆனால், அரசாங்கம் மிகமிகக் குறைவாகவே ஒதுக்கியுள்ளது.

வகுக்கப்படும் திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு சரியான முறையில் செல்லவேண்டும் என்பதே எமது விருப்பமும் நோக்கமுமாகும். மீண்டும் போர் ஆரம்பிக்கப்படும் என்ற அச்சம் இன்று எல்லா மக்கள் மத்தியிலும் உருவாகியிருக்கிறது.

போர் ஆரம்பிக்கப்படுவதை நாம் விரும்பவில்லை. சரியான தீர்வு மக்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால் இந்த சமாதான காலம் ஏற்பட்டு கடந்த 3 வருடங்களாகியும், எமது மக்களுக்கு தீர்வு கிடைக்கவில்லை. இன்றைய சமாதான சூழல் தொடர்ந்து இருக்க வேண்டும் என எல்லோரும் விரும்புகிறார்கள்.

இந்த நிலைமைக்காகவா நாங்கள் போராடினோம்? எமது மக்களுக்கு சரியான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்தோம். இதற்காகத்தானே 17 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகளை இழந்தோம். பல கோடிக்கணக்கான சொத்துக்கள், உடமைகளை இழந்தோம். இவை எல்லாம் எமக்கொரு சரியான தீர்வு கிடைக்கும் என்பதற்காகவே இழந்தோம்.

அரசாங்கத்தினதும், படையினரினதும், பேரினவாதிகளினதும் மனநிலையில் எந்தவொரு மாற்றமும் இதுவரை ஏற்படவில்லை. பேச வேண்டிய பொறுப்பு அரசிடமே இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

### பாடசாலை முகாமைச்சபை செயற்படுத்தப்படும்

பாடசாலை முகாமைச்சபையை ஜே.வி.பி. எதிர்த்தாலும், தாம் செயற்படுத்தப்போவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் மற்றும் மலையக ஆசிரியர் சங்கம் என்பன ஜனாதிபதியைச் சந்தித்தபோதே, இந்தக் கருத்தை அவர் வெளியிட்டார்.

கல்வியை முன்னேற்ற வேண்டுமானால் - பாடசாலை முகாமைத்துவம் சிறந்த முறையில் இயங்க வேண்டும். இந்த முகாமைத்துவக் குழு ஏற்பாடானது, கல்வித்துறையைத் தனியார்மயப்படுத்தும் திட்டத்தின் ஒரு அங்கம் என்பதால், ஜே.வி.பி அதை எதிர்த்து வருகிறது. இதுதொடர்பாக அண்மையில் அமைச்சரவைக் கூட்டத்தில் ஜே.வி.பியினருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் பாரிய முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இசை நிகழ்ச்சி குண்டுவெடிப்பு பிரதான சந்தேகநபர் கைது!

(கொழும்பு)

கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில், இந்தி நடிகர் ஷாருக்கான் தலைமையிலான குழுவினரின் இசை நிகழ்வின்போது இடம்பெற்ற கிரனைட் தாக்குதலுடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர் ஒருவரைத் தாம் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்தக் கைது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர் றியான்ஸி பெரேரா,

இந்தக் குண்டுவெடிப்புத் தொடர்பாக இடம்பெற்றுவரும் விசாரணைகள் குறித்து நாம் மேலதிகமாக எந்தத் தகவலையும் தெரிவிக்க விரும்பவில்லை. ஆனால் விசாரணைகள் முன்னேற்றகரமாகச் சென்றுகொண்டிருக்கின்ற அதேவேளை -

சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான மேலதிகத் தகவலை வெளியிடமுடியாது எனத் தெரிவித்தார்.

இந்த இசை நிகழ்வு நடந்தவேளை எடுக்கப்பட்ட விடியோ ஒளிநாடாவை பொலிஸார் தற்போது பார்வையிட்டு வருவதாகவும், அடுத்த சில தினங்களில் இந்தக் கிரனைட் தாக்குதலில் சம்பந்தப்பட்ட பலர் கைது செய்யப்படுவார்கள் எனவும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பெயர் குறிப்பிடவிரும்பாத, பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த இசை நிகழ்வுக்கு பாதுகாப்பாக 1500 பொலிஸார் மற்றும் படையினர் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் இவர்களையும் மீறி எவ்வாறு தாக்குதல் நடத்தியவர்கள் இந்தக் கிரனைட்டைக் கொண்டுவந்தார்களெனப் பொலிஸார் தற்போது விசாரணைகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் தீவிரவாத சக்தியா? சந்திரசேகரன் எம்.பி. நிராகரிப்பு!

(மலையகம்)

மலையகத்தில் தீவிரவாத சக்திகள் ஊடுருவியுள்ளதாக மலையகத் தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்துள்ள குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது என்று, மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

நுவரெலியாவில் இடம்பெற்ற விருந்து நிகழ்ச்சி ஒன்றில் பொலிஸாரையும், தோட்ட நிர்வாகிகளையும் சந்தித்து இந்த விடயத்தை மலையகத் தொழிற்சங்கம் ஒன்று பாதுகாப்புத் தரப்புக்கு அறிவித்துள்ளது.

இதனையடுத்து மலையகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக மலைய மக்கள் முன்னணி தலைவர் பெ.சந்திரசேகரன் கருத்து வெளியிடும்போது, இது தமிழர்களுக்கு எதிரான சக்திகளின் மற்றுமொரு நடவடிக்கை.

மலையக சமூகத்தில், புதிய சிந்தனை ஏற்படும் போதெல்லாம் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து, அதனை நசுக்கி வந்த நடவடிக்கைகளை இந்த தொழிற்சங்கம் முன்பும் மேற்கொண்டுவந்தது.

இது தமது சுயநல செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் என, அது நினைப்பதே இதற்கான காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொர்டர்பாக தொழிலாளர் காங்கிரஸ் முக்கியஸ்தரும், தோட்ட கட்டமைப்பு மற்றும் வீடமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சரான முத்து சிவலிங்கத்திடம் வினவியபோது, குறிப்பிட்ட கூட்டத்தில் ஏனைய விடயங்களே பேசப்பட்டதாகவும், தீவிரவாதிகள் ஊடுருவியதாக எந்த விடயமும் பேசப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பு நகரில்

# மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர் மீது பொலிஸார் சூடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் - இரு இளைஞர்களும், காயமெதுவுமின்றித் தப்பிச்சென்றதாகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் இரவு எட்டு மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் நின்ற பொலிஸார், மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு இளைஞர்களை சோதனைக்காக நிறுத்துமாறு தெரிவித்தபோதிலும், அவர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்றனர். இதையடுத்து, பொலிஸார் அவர்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதன்போது அந்த இரு இளைஞர் களும், தாம் சென்ற மோட்டார் சைக்கிளை போட்டுவிட்டு தப்பிச் சென்றனர்.

இவர்கள் விட்டுச்சென்ற மோட்டார் சைக்கிளை தற்போது பொலிஸார் மீட்டெடுத்து, பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றுள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறிலங்கன் எயர்லைன்ஸிடம் 1 கோடி ரூபா நட்டஈட்டு கோரிக்கை

## பாகிஸ்தான் பிரஜை தாக்கல்

(கொழும்பு)

சிறிலங்கன் விமானநிலையப் பணியாளர் ஒருவரும் மற்றும் அலுவலர்களும் தன்னை பயங்கரவாதியென முத்திரை குத்தியதற்கு நட்டஈடாக சிறிலங்கன் எயர்லைன்ஸ் ஒரு கோடி ரூபாவை தர வேண்டுமென பாகிஸ்தான் பிரஜை ஒருவர் நட்டஈடு மனுவொன்றை அனுப்பியுள்ளார்.

பாகிஸ்தான் பிரஜையான சகீட்கல் என்பவரே இந்த நட்ட ஈட்டு மனுவை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வியாபார நடவடிக்கைக் காக சிறிலங்கன் விமானத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி பயணம் மேற்கொள் வதற்காகச் சென்றவேளை சிறிலங் கன் விமானநிலைய பெண் முகாமையாளர் - பாகிஸ்தானியர்கள் அனைவரும் பயங்கரவாத சந்தேக நபர்கள் என என்னிடம் தெரிவித்தார்.

இதனையடுத்து இவரது இந்த கருத்துத் தொடர்பாக மற்றொரு விமானநிலைய அதிகாரியிடம் தெரிவித்தேன். அந்த அதிகாரியும் பெண் முகாமையாளர் கூறியதைப் போலவே தெரிவித்ததுடன் எனது விசாவையும் பறித்து நாசமாக்கினார்.

எனவே என்னை அவமதித்தமைக்காக சிறிலங்கன் விமான நிலைய அதிகாரிகள் எனக்கு ஒரு கோடி ரூபாவை நட்டஈடாகத் தரவேண்டுமென நான் இந்த மனுவை அனுப்புகின்றேன் எனத் தெரிவித்தார்.

# இந்திய - இலங்கை கூட்டுக் கடற்பயிற்சியில் தமிழ் ஊடகவியலாளருக்கு அனுமதியில்லை

## புலிகளின் உளவாளிகள் என்ற சந்தேகமாம்

(கொழும்பு)

இந்திய - இலங்கைக் கடற்படைகளின் கடற்பயிற்சி ஒத்திகை கொழும்பின் மேற்கு கடற்பகுதியில் நடைபெற்றவேளை, செய்தி சேகரிக்க அனுமதி கோரியிருந்த தமிழ் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்காததற்கு, அவர்கள் விடுதலைப் புலிகளின் உளவாளிகள் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட்டமையே காரணம் எனத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தக் கடற்பயிற்சி ஒத்திகை தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்கு 30 தமிழ் ஊடகவியலாளர்கள் அனுமதி கோரியிருந்தபோதும், தாம் குறிப்பிட்ட சில ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிப்பதற்கான அனுமதியை வழங்கவில்லையென இந்தியக் கடற்படையினர் தெரிவித்தனர். அத்துடன் குறித்த சில ஊடகவியலாளர்களை மட்டும் அனுமதிப்பதிலேயே இந்தியக் கடற்படை கவனமாக இருத்ததுடன், ஏனையவர்களுக்கான அனுமதியை வழங்காத வகையில் உறுதியாக இருந்தது.

இந்தக் கடற்பயிற்சி ஒத்திகைக்கு தமிழ் ஊடகவியலாளர்களை அனுமதிக்காதது, அவர்கள் விடுதலைப்புலிகளின் உளவாளிகளாக இருக்கலாமெனவும் - இவ்வாறு அவர்களை அனுமதித்தால், கடற்பயிற்சி நடைபெறும் இடத்தை அவர்கள் அவதானிப்பதுடன், பயிற்சியின்போது பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் போன்ற விபரங்களை விடியோ மற்றும் புகைப்படங்கள் மூலம் எடுத்து, விடுதலைப்புலிகளிடம் கையளித்துவிடுவார்கள் என்று இந்திய மற்றும் இலங்கை கடற்படை அதிகாரிகள் கருதியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இந்தக் கடற்பயிற்சி ஒத்திகைக்கு செய்தி சேகரிக்கவென பெருந்தொகையான தமிழ் ஊடகவியலாளர்கள் அனுமதி கோரியமை குறித்தும், இந்திய - இலங்கை கடற்படை அதிகாரிகள் அச்சமடைந்திருந்ததுடன், இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் உளவாளிகள் எனவும் எண்ணங்கொண்டிருந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

### அகதிகள் 10 பேர் தாயகம் திரும்பினர்!

தமிழ் நாட்டில் இருந்து 10 ஈழத் தமிழ் அகதிகள் மன்னார் வந்தடைந்துள்ளனர்.

இந்தியாவின் கோயம்புத்தூர் அகதி முகாம் ஒன்றில் வசித்து வந்த 10 ஈழத் தமிழ் அகதிகள் இராமேஸ்வரத்தில் இருந்து சிறிய படகு ஒன்றின் மூலம் கூட்டிவரப்பட்டு, மன்னாரில் மணற்திட்டி ஒன்றில் இறக்கிவிடப்பட்டனர்.

இவர்கள், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, இவர்களைச் சொந்த இடத்துக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் நீதிவான் உத்தரவிட்டார்.

### இளைஞர் கைது!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கைக்குண்டுகளுடன் பயணம் செய்த இளைஞர் ஒருவரைச் சோதனைச் சாவடியில் வைத்துப் பொலிஸார் கைது செய்திருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

நேற்றுமுன்தினம் மாலை வாழைச்சேனையிலிருந்து வெருகல் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ் இடைநடுவில் சோதனையிடப்பட்டபோதே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் இருந்து இரண்டு கைக்குண்டுகள் கைப்பற்றியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஒருலட்சம் இளைஞர் யுவதிகளுக்கு அடுத்த ஆண்டில் வேலைவாய்ப்பு!

(கொழும்பு)

அடுத்த வருடம் ஒரு லட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வழங்குவதற்கான திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரச, தனியார் துறைகளில் அவசர நியமனங்களை வழங்குவதற்கான திட்டங்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதென இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

இதேவேளை, பத்தாயிரம் உள்ளூர் இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

சகல மாவட்டங்களிலும் தனியார் துறையுடன் வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்றும் ஜீவன் குமாரதுங்க மேலும் தெரிவித்தார்.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்டில் வலுவான நிலையில் இங்கிலாந்து!









தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி அபாரமாக ஆடிவருகிறது. சிறப்பாக ஆடிய இங்கிலாந்து அணி வீரர் அன்ட்ரு ஸ்ரரஸ் சதம் அடித்தார்.

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக தென்னாபிரிக்காவிற்குப் பயணம் மேற்கொண்டுள்ளது. முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத் நகரில் நடைபெற்றுவருகிறது.

இதில் தென்னாபிரிக்கா முதல் நாள் ஆட்டநேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 273 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டிப்பென்னா 79, சோலேகிலி 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இரணடாம் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

டிப்பென்னா, சோலேகிலி ஜோடி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. பிளின்ரொப் பந்தில் 11 ஆவது பவுண்டரி அடித்த டிப்பென்னா சதத்தைப் பூர்த்தி செய்தார். டெஸ்ட் போட்டிகளில் இது அவரது 3 ஆவது சதமாகும். தொடர்ந்து ஆடிய டிப்பென்னா (110), ஜோன்ஸ் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சோலேகிலி 22 ஓட்டங்களில் கைல்ஸ் வீசிய சுழற்பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். இந்த ஜோடி 8 ஆவது விக்கெட்டுக்கு 63 ஓட்டங்களைச் சேர்த்தது.

கடைசி விக்கெட்டுக்கு களமிறங்கிய ஸ்டீன் 8 ஓட்டங்களில் வெளியேறினார். இதன்மூலம் தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 337 ஓட்டங்கள் குவித்தது. என்ரினி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இங்கிலாந்து தரப்பில் ஹொகார்ட் 3, பிளின்ரொப் 3, கைல்ஸ் 2, ஹர்மிசன் 1, ஜோன்ஸ் 1 விக்கெட்டை கைப்பற்றினர்.

அடுத்து இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸைத் தொடங்கியது. ட்ரெஸ்கொதிக், ஸ்ரரஸ் இணைந்து ஆட்டத்தைத் தொடங்கினர். இந்த ஜோடி அபாரமாக ஆடி அணிக்கு நல்ல தொடக்கத்தைத் தந்தது.

அறிமுக வீரரான ஸ்டீன் இந்த ஜோடியைப் பிரித்தார். இவரது பந்தில் ட்ரெஸ்கொதிக் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனாலும் மறுமுனையில் ஸ்ரரஸ் தொடர்ந்து சிறப்பாக ஆடினார். இவர் 194 பந்துகளில் டெஸ்ட் போட்டியில் தனது 3 ஆவது சதத்தைப் பூர்த்திசெய்தார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக இவர் அடித்த முதல் சதம் இதுவாகும்.

இறுதியில் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 1 விக்கெட் இழப்புக்கு 227 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ஸ்ரரஸ் 120 ஓட்டங்களுடனும், புட்சர் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்காவை விட இங்கிலாந்து அணி 110 ஓட்டங்கள் பின்தங்கியுள்ளது.

## அசாருதீனின் சாதனையை கங்கூலி முறியடித்தார்!



இந்திய அணியின் கப்டன் மற்றும் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான கங்கூலி பங்களாதேஷுக்கெதிராக நடைபெற்றுவரும் 2 ஆவது டெஸ்டில் 88 ஓட்டங்கள் எடுத்தார்.

கங்கூலி 30 ஓட்டங்களைக் கடந்தபோது இந்தியக் கப்டன்களில் அந்நிய மண்ணில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர் என்ற பெருமையைப் பெற்றார்.

அவர் வெளிநாட்டு மைதானங்களில் 25 டெஸ்டில் விளையாடி 1,576 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதற்கு முன்பு முன்னாள் கப்டன் அசாருதீன் 1,517 ஓட்டங்களை எடுத்ததே வெளிநாட்டு மைதானங்களில் எடுத்த அதிக ஓட்டங்களாக இருந்தது. இந்தச் சாதனையை கங்கூலி முறியடித்தார்.

மேலும் டெண்டுல்கர் 13 டெஸ்டில் ஆடி 1,098 ஓட்டங்களும், கவாஸ்கர் 1,023 ஓட்டங்களும் எடுத்து 3 ஆவது, 4 ஆவது இடங்களில் உள்ளனர்.

# விளையாட்டு

## அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் பாகிஸ்தான் அணி படுதோல்வி!

(பேர்த்)

பேர்த்தில் நடைபெற்ற பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 491 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.





நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி - முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்ததையடுத்து முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 381 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தது.



இதனையடுத்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதல் இனிஙஸில் 179 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

முதல் இனிங்ஸிலேயே முன்னிலையிலிருந்த அவுஸ்ரேலிய அணி, இரண்டாவது இனிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 361 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

வெற்றி பெறுவதற்கு 563 ஓட்டங்கள் பெறவேண்டிய கடினமான இலக்குடன் களம் இறங்கிய பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம மாலை ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது 1 விக்கெட் இழப்புக்கு 18 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

நேற்று ஆட்டம் தொடர்ந்து இடம் பெற்றபோது அவுஸ்ரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மக்ராவின் அபாரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் பொலபொலவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

72 ஓட்டங்களை எடுப்பதற்குள் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து படுதோல்வியடைந்தது. இதனால் அவுஸ்ரேலிய அணி 491 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அந்த அணி சார்பில் யூனுஸ்கான் 17, யூசுப் யுகானா 27 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்துவீச்சில் மக்ரா 16 ஓவர்கள் பந்துவீசி 24 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 8 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். கஸ்பரோவிச் 3.3 ஓவர்களில் 4 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

## தோல்வியின் விளிம்பில் பங்களாதேஷ் அணி!



இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் பங்களாதேஷ் அணி 333 ஓட்டங்களைக் குவித்தபோதும், இரண்டாவது இனிங்ஸில் 118 ஓட்டங்களுக்குள் 9 விக்கெட்டுக்களை இழந்ததால் தோல்வியின் விளிம்பில் நின்றுகொண்டிருக்கிறது.

சிட்டகொங் நகரில் நடைபெற்றுவரும் டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் இந்திய அணியின் கம்பீர், ராவிட், கங்கூலி ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 540 ஓட்டங்களைக் குவித்தது.

அடுத்து ஆடிய பங்களாதேஷ் அணி 2 ஆவது நாளான நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்களை எடுத்திருந்தது. பஷார் ஓட்டம் எதுவும் எடுக்காமல் இருந்தார்.

நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. பஷாரும், அஸ்ரபுல்லும் களம் இறங்கினார்கள். இருவரும் இந்திய வீரர்களின் பந்துவீச்சைத் தடுத்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இதனால் அந்த அணி 100 ஓட்டங்களைக் கடந்தது.

ஸ்கோர் 124 ஆக இருந்தபோது ஹபிபுல் பஷார் ஆட்டம் இழந்தார். அவரது விக்கெட்டை கும்ளே கைப்பற்றினார். 5 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக அகமது, அஸ்ரபுல்லுடன் இணைந்தார்.



அஸ்ரபுல் அடித்து ஆடினார். இதனால் அவர் அரைச்சதத்தைக் கடந்தார். மதிய உணவு இடைவேளை வரை அந்த அணி 4 விக்கெட் இழப்புக்கு 174 ஓட்டங்களை எடுத்திருந்தது. அஸ்ரபுல் 62 ஓட்டங்களுடனும், அகமது 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்குப் பின்பு இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். ஸ்கோர் 220 ஆக இருந்தபோது சிறப்பாக ஆடிவந்த அஸ்ரபுல் சதம் அடித்தார். அவர் 124 பந்துகளில் 15 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் சதத்தைக் கடந்தார். இது அவரது 2 ஆவது சதமாகும்.

அகமட் 43 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கும்ளே பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 239 ஆக இருந்தது. இந்த ஜோடி 5 ஆவது விக்கெட்டுக்கு 114 ஓட்டங்களைச் சேர்த்தது.

அடுத்து களம் இறங்கிய ரானா ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் சகீர்கான் பந்தில் எல்.பி.டபிள்யூ ஆனார். இந்த விக்கெட்டை கைப்பற்றியதன் மூலம் சகீர்கான் டெஸ்டில் 100 விக்கெட்டுக்களைக் கடந்தார்.

அடுத்து 7 ஆவது விக்கெட் ஜோடியாக அஸ்ரபுல்லுடன் மசூத் களம் இறங்கினார். அணியின் ஸ்கோர் 300 ஓட்டங்களாக இருக்கும்போது மசூத் 22 ஓட்டங்களில் சகீர்கானின் பந்தில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து 8 ஆவது விக்கெட் ஜோடியாக ரபீக் களம் இறங்கினார்.

இவர் ஓட்டம் ஏதும் எடுக்காமல் பதானின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். ஒருபுறம் தொடர்ந்து விக்கெட் வீழ்ந்தாலும் மறுமுனையில் அஸ்ரபுல் சிறப்பாக விளையாடி 150 ஓட்டங்களைக் கடந்தார். பங்களாதேஷ் அணியின் டெஸ்ட் தனிநபர் அதிகபட்ச ஸ்கோர் இதுவாகும்.

9 ஆவது விக்கெட் ஜோடியாக ஜுபையர் களம் இறங்கினார். இவர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் பதான் பந்தில் போல்டானார்.

கடைசி விக்கெட்டாக ஹுசைன் களம் இறங்கினார். பங்களாதேஷ் 333 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஹுசைன் ரன் அவுட்டானார். இதனால் 333 ஓட்டங்களில் பங்களாதேஷ் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஏழு ஓட்டங்களால் பலோ ஓன் ஆனது.



பலோ ஓனைத் தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸைத தொடர்ந்து பங்களாதேஷைத் துடுப்பெடுத்தாட அனுமதித்தார் கங்கூலி.

இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ வீரர்கள் இந்தியப் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்கமுடியாமல் தொடர்ந்து ஒருவர்பின் ஒருவராக ஆட்டமிழந்து வெளியேறினார்கள்.

நேற்று 2 ஓவர்கள் இருந்தநிலையில் வெளிச்சம் இல்லாததால் 3 ஆவது நாள் ஆட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. பங்களாதேஷ் வசம் இன்னும் ஒரு விக்கெட் உள்ளது. இன்று காலை அந்த விக்கெட் வீழ்ந்ததும் இந்தியாவின் இனிங்ஸ் வெற்றி உறுதியாகும். 3 ஆவது நாள் ஆட்டமுடிவில் பங்களாதேஷ் 9 விக்கெட் இழப்பிற்கு 118 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

முதல் 5 விக்கெட்டையும் சிறப்பாக பந்துவீசி பதான் கைப்பற்றினார். கும்ளே 2 விக்கெட்டும், ஹர்பஜன் 1 விக்கெட்டும், டெண்டுல்கர் 1 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

# உதவி வழங்கும் நாடுகளின் அறிக்கை

# இனவாத சக்திகளுக்கான எச்சரிக்கை

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டுத் தலைமைப் பொறுப்பைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளிக் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை தொடர்பான அரசாங்கத்தின் மெத்த னப் போக்குக்கு விசனம் தெரி வித்துள்ளதுடன், ஜே.வி.பியின் பேச்சுவார்த் தைக்கெதிரான, சமாதானததுக் கெதிரான - போக்கைக கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரும்படியும் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இலங்கையின் யதார்த்தமான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டதன் வெளிப்பாடே இவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்ததும், அதைத் தொடர்ந்து ஓர் கூட்டறிக்கையை வெளியிட்டதுமாகும். கூட்டறிக்கையானது ஜே.வி.பி யின் நிலைப்பாட்டை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் ஜே.வி.பியின் செயலாளர் வெளியிட்டுள்ள பதிலறிக்கையானது - சிறுபிள்ளைத் தனமானதும், நகைப்புக்கிடமானதாகவுமே உள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற வரைவின் அடிப்படையில் பேசலாம் என்று அந்த வரைவு தொடர்பாக அரசாங்கத்துக்கு இருக்கக் கூடிய கருத்துக்களையும் பேச்சு வார்த்தைக்குட்படுத்தலாம் என மீண்டும் மீண்டும் கூறிய பின்னரும், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகள் தனி நாட்டுக்கான முதல்படி எனக்கூறுவதும், அது தொடர்பாகப் பேசக்கூடாதென ஜனாதிபதியை வற்புறுத்துவதும், ஜே.வி.பி பேச்சுவார்த்தையை விரும்பவில்லை என்பதையே காட்டுகிறது.

ஜே.வி.பியினருக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஒரு விடயத்தை மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம். அதாவது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் தேசியத்துக்கும், சமஷ்டி அரசியல் அமைப்புடன் கூடிய ஓர் சுயாட்சி அரசு உருவாக்கப்படவேண்டும். இது தனிநாட்டில் இருந்து மிகப் பாரிய விட்டுக் கொடுப்புடன் நாம் கீழிறங்கி வந்துள்ளோம் என்பதைப் புரியவேண்டும். ஆனால் சிங்களத் தீவிரவாதிகள் அன்று தந்தை செல்வநாயம் சமஷ்டி அரசியலமைப்பு முறையைக் கோரியபோதும், அது தனிநாடடுக்கான முதற்படி என்றே கூறினார்கள். இன்றும் சிங்களத் தீவிர வாதிகளின் தொனியில் எந்தவித மாற்றமுமில்லை. அதே பல்லவியையே பாடுகின்றார்கள்.

தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அதைப் பேசித்தான் தீர்க்கவேண்டும் என்பதை ஜனாதிபதி, ஐ.தே.க மற்றும் பல சிங்கள அமைப்புக்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. அவை உண்மையாகவே இதை ஏற்றுக்கொண்டால், இலங்கையை ஆட்சி செய்த அரசுகளின் தொடர்ச்சியான அடக்குமுறைகளே இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமென்பதையும் புரிநது கொள்வார்கள்.

எனவே, அடக்கு முறைக்குட்பட்ட ஓர் தேசிய இனம் தமக்கான தீர்வைத் தாம்தான் முன்வைக்க வேண்டுமேதவிர, அடக்குமுறை அரசின் அல்லது அதிலும விடத் தீவிர சிங்கள இன வெறியர்களின் தீர்வுகளை நாம் ஏற்க வேண்டுமென்பதல்ல. சிங்களப் பெருந் தேசியவாதத்தால் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு, அவர்களது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் ஓர் தீர்வைத் தரமுடியாதென்பதால்தான் நாங்கள் தனிநாடு கோரினோம் இன்று இலங்கையினதும், சர்வசே சமூகத்தினதும் கருத்தை ஏற்று, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வொன்றைக் காணத் தமிழினம் தயாராக இருக்கின்றது என்பதைத் தமிழர் தரப்பு மிகத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது.

அதன் பின்னரும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேசினால் அது வெறும் குதர்க்கமான பேச்சாகவே இருக்கும்.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை அவர்கள் ஓர் சமஷ்டி அரசியல் அமைப்பு முறையைக் கூட ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே உண்மையாகும். இந்த நிலையில் தாம் பேச்சுவார்த்தைக்குக் கதவைத் திறந்து வைததிருப்பதாகக் கூறுவது வெற்றுப் பேச்சேயாகும். அது மாத்திரமல்ல 1971 ஆம் ஆண்டிலும், 1987 - 90 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திலும், எத்தனை பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், உத்தியோகத்தர்கள், ஏனைய அரசியல் கட்சித் தலைவர்கள், ஏனைய அரசியல் கட்சி உறுப்பினர்கள். ஜே.வி.பியின் ஆயுதக் குழுக்களால் கொலை செய்யப்பட்டார்கள். 1971 ஆம் ஆண்டில் சேகுவேராவாகவும், 1987 - 90 ஆம் ஆண்டில் தேசப்பிரேமிகளாகவும் இவர்கள் செய்த கொலைளை இவர்கள் சற்றுத் திரும்பிப் பார்த்தபின், இவர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுவது நன்றாக இருக்கும். தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஜனநாயகத்துக்காகவும், மனித உரிமைக்காகவும், அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகவுமே போராடுகின்றது. எனவே இன்றைய உடனடித் தேவை தமிழ் மக்களுக்குரித்தான தீர்வைக்காணும் முகமாகப் பேச்சுவார்த்தையா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு இனறு ஜனாதிபதியிடம் வந்துள்ளது.






மாலதி படையணியின் தயாரிப்பில் வெளியான 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழையின் அறிமுகவிழா நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபததில் நடைபெற்றவேளை, நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களை முதலாவது படத்திலும், ஒலிப்பேழையின் முதற்பிரதியை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் கலைவிழி வெளியிட்டு வைக்க அதனை மாவீரர் கப்டன் அமுதினியின் தாயார் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும் காணலாம்

# தீவக கடற்போக்குவரத்துக்கு இந்திய இழுவைப் படகுகள்

நெடுந்தீவு பிரதேச மக்களின் கடற்போக்குவரத்தை இலகுபடுத்தும் நோக்கில் இரண்டு இந்திய இழுவைப்படகுகள், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரால் நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 17 ஆம் திகதியன்று ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் மற்றும் காரைநகர் கடற்படை அதிகாரியிடமிருந்து நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சு.கோபாலசிங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு, நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நெடுந்தீவுக்குக் கொண்டுவரப்பட்டது.

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், பணியாளர்கள் மற்றும் சங்க நலன் விரும்பிகள் என சுமார் 15 பேர் கொண்ட குழுவினர் இந்தப் படகைப் பொறுப்பேற்கச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்ததலில் ஈடுபட்ட வேளையில் பறிமுதல் செய்யப்பட்ட இந்திய இழுவைப் படகுகள் நயினாதீவு, ஊர்காவற்துறை பகுதி களுக்கும் தலா ஒவ்வொன்று வீதம் வழங்கப்பட்டது. (113)



அண்மையில் ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போவின் சிரேஷ்ட சாலைப்பரிசோதகர் ச.தர்மரட்ணம் அல்வாய் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்திய சேவை நலன் பாராட்டு விழாவில் தொழிற்சங்கத்தலைவர் கி.அருமைத்துரையால் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்படுவதைபடத்தில் காணலாம்.

# கிராமிய வீதிகளை புனரமைக்க ஒருகோடி 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ் மாவட்டத்தில் கிராமிய வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தற்போது உள்ளூராட்சி அமைப்புக்களினால் நாடாளுமன்ற உறுப்பினர்களது தெரிவுகளுக் கமைய பத்தொன்பது - வீதிகள் ஒரு கோடி மூன்று லட்சத்து பன்னீராயிரத்து ஐநூறுரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

சாவகச்சேரி பிரதேச சபையினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் தம்புகடையடி, தெய்வக் கேணி வீதியும், பருத்தித்துறை நகர சபையினால் - 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் தம்பசிட்டி வீதியும், பருத்தித்துறை பிரதேச சபையினால் 3 லட்சத்து 125 ஆயிரம் ரூபா செலவில் - அல்வாய் வடக்கு குமுதெனிய வீதியும், 3 லட்சத்து 125 ஆயிரம் ரூபா செலவில் அல்வாய் வடக்கு மாயக்கை விருமார கோயில் வீதியும், வடக்கு மாநகர சபையினால் பருத்தித்துறை வீதி முதலாம் இலக்க ஒருங்கை- 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவிலும், சூரியவெளி கிராம குடியிருப்பு வீதி - 3 லட்சத்து 125 ஆயிரம் ரூபா செலவிலும் புனரமைப்புச் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன.

நல்லூர் பிரதேச சபையினால் 6 லட்சத்து 5000 ரூபா செலவில் நடராச வீதியும், ஊர்காவற்துறை பிர தேச சபையினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் சுருவில் மெலின்சுமுனை வீதியும், வலிகாமம் வடக்கு பிரதேசசபையினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் களவோடை செட்டிசோலை வீதியும், வடமராட்சி தென்மேற்கு பிரதேசசபையினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் கரவெட்டி யார்க்கரு காளி கோயில் வீதியும், வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் 3 லட்சத்து 125 ஆயிரம் ரூபா செலவில் சுழிபுரம் அலமேடை வீதியும், 3 லட்சத்து 125 ஆயிரம் ரூபா செலவில் குடாக்கனை வீதியும், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 3 லட்சத்து 125 ஆயிரம் ரூபா செலவில் நீரவேலி சீவியகாடு இந்து கத்தோலிக்க மயான வீதியும், வல்வெட்டித்துறை நகர வீதியும், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையினால் 62 லட்சத்து 5 ஆயிரம் ரூபா செலவில் பண்டத்தரிப்பு நல்லுகண்ணி வீதியும், வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் இணுவில் பண்ணை வீதியும், நெடுந்தீவு பிரதேச சபை யினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் கோட்டைக் காடு பண்ணங்காணி வீதியும், வேலணை பிரதேச சபையினால் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் கந்தன் கடவை வீதியும் புனரமைப்பு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(31)


## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : சோ.தர்ஷாயினி
முகவரி : கமலவாசம், அல்வாய்.

அகவை இரண்டு



பெயர் : கு.கலாகேசவன்
முகவரி : திணைப்புனம், அல்வாய்.

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


## கூரை விரிப்புகள் அன்பளிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேசத்திலுள்ள வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட சுமார் 200 கூரை விரிப்புகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியில் வழங் கப்படவுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைமூலம் எடுத்து வரப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட, குடிசை வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பல குடும்பங்கள் கடந்த நாட்களில் பெய்த கடும் மழையின் பாதிப்புக்களை ஓரளவு தாங்கிக் கொண்டமை குறிப்பிடத தக்கது. (113)



# காதல் விடுதலை

க.ஸ்ரீதேவி

சிறுகதை



"ஹலோ... ஹலோ நான் யார்? கதைக்கிற தெரியிதா" என்று சில நாட்களுக்குப் பின்னர் தனது காதலிக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்தான். அவளோ ஓ... தெரியுது இப்ப ஏன் டெலிபோன் எடுத்தீங்க, இல்ல வீட்டுக்குப் போயிட்டு சுகமா வந்திட்டீரா? என்று கேட்கத்தான் அதற்கு அவளோ நான் வீட்ட போனா என்ன, இஞ்ச இருந்தா என்ன அது உங்களுக்குத் தேவையில்லை.

இந்தக் காதல் சோடி பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருக்கும் காதல் சோடி. நடுத்தரமான குடும்பத்தில் பிறந்தவன். அவன் எவ்வளவோ இன்னல்களின் மத்தியில் படித்துப் பல்கலைக்கழகத்துக்கு வந்தவன். இவன் பல்கலைக்கழகம் வரும்போது மெல்லிய உடல் தோற்றத்தையும், ஒரு காலத்தில் உதைபந்தாட்டப் போட்டியில் தனது மாவட்டத்தில் கொடி கட்டிப் பறந்தவன். ஆனால், அந்தக் கொடி இடையில் அறுந்து விழுந்து விட்டது. விளையாடும்போது தலையில் ஏற்பட்ட பலத்த அடியினால் மாறு கண்ணுடையவனானான். பரட்டைத் தலைமயிருடன் அழுக்குப் படிந்த உடைகளுடன் தானும், தன்பாடாகவும் திரிவான். இருந்தும் படிப்பை மட்டும் விட்டுவைக்கவில்லை. பல்கலைக்கழகத்தில் எந்த மாணவனுக்கும் யார்? என்று தெரியாதவனாக இருந்தான். நண்பர்களும் இவனை இணைப்பதில்லை. இவனுக்கு ஏழ்மையில், அவனது ஊரில் பல நண்பர்கள் இருந்தார்கள். இதை நினைத்து நினைத்துப் பெருமையடைவான்.

"அது சரி நீர் இஞ்ச இருந்தா சரி. அங்க இருந்தா சரி நான் கேட்கக் கூடாதா" என்றான் "சரி நான் போனை வைக்கட்டா" என்றாள். "உம்மப் போல இரண்டு நாக்கு உடையவன் நான் இல்ல. உடும்புக்குத்தான் கடவுள் இரண்டு நாக்கைப் படைச்சிருக்கான். மனிதருக்கு அப்படிக் கடவுள் செய்யவில்லை. ஏன் உமக்கு இரும்பு இதயமா? என்னை உயிருக்கு உயிராகக் காதலிக்கிறன் என்று சொல்லிப் போட்டு ஏன் இப்படி என்ன வெறுத்துக் கதைக்கிறீர்" கலங்கிய கண்களுடன் கூறினான்.

முதலாம் வருடம் முடிந்து, இரண்டாம் வருடத்துக்கு வந்தான். இவன் சில வைத்தியர்களின் ஆலோசனைப் படியும், அவர்கள் அளித்த சிகிச்சையினாலும் சிறிய வயதில் இருந்த அழகை மீண்டும் பெற்றான். வாழ்க்கையில் ஏதோ சாதிக்கப் பிறந்தவன்போல அவனது முகத்தில்களை தெரியும். எந்தத் தீய பழக்கவழக்கங்களும் தெரியாமல் இருந்த இவன் சில பல்கலைக் கழக மாணவர்களின் தொந்தரவுகளினால் சிகரெட் குடிப்பதைப் பழகினான். அதுவும் பெரிதாக இல்லை. தனது காதலியிடம் எதையும் மறைக்காமல் வெளிப்படையாகக் கதைக்கக் கூடியவன். காதலியின் கட்டளைக்குக் கட்டுப்பட்டுப் புகைபிடிக்கும் பழக்கத்தையும் கைவிட்டான்.

வைத்தியசாலைக்கு கண் சத்திர சிகிச்சைக்குத் தனியாகச் சென்றதினால், யாருடைய உதவியும் கிடைக்கவில்லை. வெளிமாவட்ட மாணவர்கள் விடுதியில் தங்கிப் படிப்பதனால் அவர அவர்கள் தங்களின் வேலைகளைத் தாங்களே கவனிக்க வேண்டும். தனக்கு நடக்க இருக்கும் கண் சத்திரசிகிச்சையைத் தனது குடும்பத்துக்குத் தெரிவிக்கவில்லை. அவ்வாறு தெரிவித்தாலும் அவர்கள் இங்கு வரக்கூடியதாக நாட்டுச் சூழல் இல்லை.

இந்த வேளையில்தான் வைத்தியசாலையில் ஒரு தாதி இவனுக்கு உதவி செய்ய முன்னுக்கு வந்தாள். அவளின் உதவியால் இரண்டு சத்திரசிகிச்சையும் இனிதே நிறைவேறியது. சத்திரசிகிச்சைக்குக் கொண்டுபோகும் முன்னே, இவன்மீது காதல் கொண்டுவிட்டாள். என்ன செய்வது வயது தடையாக இருந்ததனால். இந்தத் தாதி தனது காதலைச் சொல்லாமல் கடைசிவரை மூடிவைத்தாள். இவனோ அக்கா அக்கா என்று அழைத்து, அவள் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தான். இவனுக்குத் தெரியும் இவளின் காதல். இருந்தும் எத்தனை நண்பர்கள் இருந்தாலும் ஆபத்தில் உதவியவன்தான் உத்தமன் என்பதைப் போல இவன் அவளைக் கருதினான்.

ஒரு கையில் ரிசிவருடன் மற்றைய கையால் கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு "நான் உமக்கிட்ட முக்கியமான விடயம் கதைக்கணும் நேரில் வாரும்" என்று காலில் விழாதகுறையாகக் கேட்டான். அவள் "இல்ல நான் வர முடியாது" என்று மறுத்ததும், தான் சொல்ல நினைத்த விடயத்தைத் தொலைபேசியின் மூலம் கூறத் தொடங்கினான். "நீர் என்னை உண்மையாகக் காதலிக்கவில்லை. இல்லாட்டி ஏன் இப்படி வெறுத்துக் கதைக்கிறீர். உம்முடைய நண்பிக்காக வேண்டித்தான் நீர் என்னைக் காதலித்து இருக்கிறீர். என்னைப் போன ஞாயிறு சந்தித்தபோது, நீர் கூறிய கதையை இரவு இரவாகவும், பகல் பகலாகவும் யோசித்து முடிவுக்கு வந்தனான். உமது நண்பியை எனக்கு உம் மூலம்தான் தெரியும். ஆனால் அவளுக்கு முதலே என்னைத் தெரியும் என்பதை நீர் கூறிய பிறகுதான் தெரிந்துகொண்டேன். என்னைக் காதலித்துத் திருமணம் செய்யாவிடின், எனக்காக வேண்டித் தனது உயிரை விட்டுவிடுவேன் என்று கூறிய காரணத்துக்காக நீர் என்னைக் காதலித்தீர். உமது நண்பியின் வேண்டுகோளைப் பூர்த்திசெய்ய நானா பலிக்கடாவாகக் கிடைத்தன். சரி உமது நட்பை நான் மதிக்கிறன், போற்றிறன் இருந்தும், நீர் இப்படிச் செய்திருக்கக்கூடாது. என்னைக் காதலிக்கும் முன்னரே எனக்குக் கூறியிருந்தா நானே நேரில் உம்மை எனக்குப் பிடிக்கவில்லை என்று சொல்லியிருப்பேன். நான் இந்த இடத்தில் உமது நண்பியை உயிர் நண்பியாக ஏற்றுக் கொள்கின்றன். ஏனெண்டால், உம்மைக் காதலித்ததினால்... இப்படியொரு நண்பி எனக்காக உயிரைக்கொடுக்க இருக்கிறாள் என்று தெரிந்துகொண்டேன். ஆனாலும், நீர் நண்பிக்காக வேண்டி நான்தானே காதலிக்கக் கிடைத்தன். இந்தக் காலத்தில் உண்மைக் காதல் என்று எதுவும் இல்லை. நான் காதலித்த விடயங்கள் மூன்று. அவை; பெற்றோர், கல்வி, இலக்கியத்துறை. இவைகளுக்கு முன்தான் உம்மைக் கொண்டுவர விரும்பாததினால் நான்காவது இடத்தில் வைத்தனான். நீரும் எல்லாம் சரி சரி என்று கூறிவிட்டு, இப்ப போன் எடுத்தா நான்எப்படி இருந்தாலும் உனக்கு என்ன என்று எடுத்தெறிந்து கதைக்கிறீர். நான் எதையும் மறைக்காமல் உம்மிடம் சொன்னனான். அப்படிச் சொன்னது என்னுடைய தவறுதான். மற்றைய ஆண்களைப்போல உள்ள ஒன்றும், வெளிய ஒன்றும் பேசியிருந்தால் இப்படி நீர் எடுத்தெறிந்து கதைக்கமாட்டீர். நான் எத்தனையோ, பெண்களிடம் பழகியிருக்கிறன். ஆனாலும் எனது மனச்சாட்சியின்படி காதலிக்கச்சொல்லிக் கேட்ட பெண் நீதான். நான் உன்னைக் காதலித்துக் கைவிடக் கேட்கவில்லை. இளமை தொடங்கி முதுமை வரையும் எமது காதல் நிலைத்திருக்க எண்ணினேன். என்னிடம் விருப்பம் கேட்கத் துடித்துக்கொண்டிருக்கும் ஜீவன் ஒன்று இருக்கு என்று நான் சொன்னபோது, அவளைத் திருமணம் செய்தால் இந்தச் சமுதாயமும், குடும்பமும் எங்களை ஏற்றுக்கொள்ளாது. வயது கூடிய பெண்ணைத் திருமணம் செய்வது... சரி அது கிடக்கட்டும். ஏன் ஒரு நாளும் இல்லாதமாதிரி வீட்டுக்குப் போயிட்டு வந்ததும் வேண்டா வெறுப்பாகக் கதைக்கிறீர், இல்லாட்டி நான் உம்மைப் பற்றி விசாரித்தது பிழையா? இல்லாட்டி உமது நண்பி கூறிய கதையை வெளி மாணவர்களிடம் கேட்டதற்காகவா?

இவனது தனித்திறமையையும், பிரபல்யத்தையும் சில காலம் பயன்படுத்திக் கொள்ளவும். நண்பிக்குச் செய்யவேண்டிய கடமைக்காகவும் இவள் காதல் என்ற புனிதமான சொல்லைப் பயன்படுத்தி ஆசைகாட்டி, மோசம் செய்துள்ளாள். என்ன செய்வது இவனுக்கு எங்கே போனது அறிவு. ஆள் கண்ணுக்குப் பார்க்கும்போது கவர்ச்சியாகவும், வெள்ளையாகவும், வடிவாகவும் இருந்தால் போதுமா. பழகிய பிறகுதானே தெரிந்தது அவளின் மனம்.

சாதி, குலம், கோத்திரம் எதுவும் தெரியாமல் ஒருத்தி காதலித்தாலே அவளின் காதலை என்னவென்று சொல்வது. நல்லவேளை இவனும் விருப்பம் கேட்கவில்லை. அவளும் கேட்கவில்லை. இல்லாவிடின் இந்தக் காதலைப் போலதான் அந்தக் காதலிலும் எதுவும் விபரீதம் நடந்திருக்கும் என்று நாம் கூறமுடியாது. அது நடைபெற்றிருந்தால் அதன் நன்மை தீமைகள் தெரிந்திருக்கும்.

"சரி நான் உங்களை முதலில் காதலித்தது எனது நண்பிக்காகத்தான். இப்ப நான் உங்களை உண்மையாகக் காதலிக்கிறேன். எங்கட வீட்டுக்காரர் வேண்டாம் என்று சொன்னாலும், கேட்காமல் உங்களுடன் வாரன். இப்ப நேரில் கூப்பிட்டீங்க. சரி வாரன்" என்று, தான் செய்த தவறை நினைத்துக் கெஞ்சினாள்.

"வேண்டாம் நீர் நேரில் வரவேண்டாம். நேரில் சொல்ல நினைத்தது எல்லாம் சொல்லிவிட்டன். இனி என்னத்துக்கு. இண்டைக்கும் வரவேண்டாம். எண்டைக்கும் வரவேண்டாம். பொய்யா கொஞ்சநாள் காதலிக்கிறது. உண்மையாகக் கொஞ்சநாளைக்குக் காதலிக்கிறது. இது என்ன காதல் கண்ணாம்பூச்சி விளையாட்டா? இப்படியும் சொல்லுவிங்க' இன்னும் கொஞ்ச நாளால நான் உங்களக் காதலிக்கவேயில்லை என்றும் சொல்லுவிங்க. நீர் எங்கிருந்தாலும் சந்தோஷத்துடன் வாழ எனது வாழ்த்துக்கள். ஆனால், நான் கொண்ட காதல் நீர் என்னுடன் இல்லையென்றாலும் என்றும் வாழும்" என்று கூறி மௌனமாக இருந்தான்.

அவளோ "இல்லை நான் இப்ப உங்கள உண்மையாகக் காதலிக்கிறேன்" என்று கெஞ்சினாள். இவனோ "நான் இப்பவும் உன்னுடைய நண்பியை எனது நண்பியாக ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், உம்மை எனது காதலியாக ஏற்க எனக்குத் தகுதியில்லை. நீங்கள் எல்லாம் பெரிய வசதிகளுடன் வாழ்பவர்கள். நாங்கள் அப்படியில்லை. என்னிடம் வந்தால் உமக்கு நிம்மதியிருக்காது. இனிமேலாவது யாருக்காகவும் யாரையும் பலியாக்கிவிடாதியும். தொலைபேசி மூலம் ஆரம்பித்த காதல் தொலைபேசியினூடாகவே தொலைந்து போகட்டும். 'மதியாதார் தலைவாசல் மிதிக்காமல்' வாழ்வது எங்கள் பழக்கம். நான் உன்னைப்பற்றி எவ்வளவோ? கனவு கண்டிருந்தேன். அவையெல்லாம் கனவாகவே போய்விட்டது" என்றுகூறி தொலைபேசியை வைத்துவிட்டுக் காதலிலிருந்து விடுதலைபெற்று, மீண்டும் குடும்ப பந்த பாசத்திலும், கல்வி, இலக்கியத்துறையிலும் இணைந்துகொண்டான். இவளோ தான் செய்த தவறை எண்ணி எண்ணி "ஹலோ... ஹலோ...?" என்று கதறினாள். எதிர் பதில் இல்லாமல் செந்தாமரை போல சிவந்த கண்களுடன் பெண்கள் விடுதியை நோக்கிப் பயணமானாள்.

## மறுப்புகளின் மறுதலிப்பு

மயான அமைதியில்
என் மனச்சாட்சி
அதன் முன் மண்டியிட்டு
கிடக்கிறேன் நான்.

நினைவுக் குதிரையின்
பின்னோக்கிய ஓட்டத்தில்
கிளப்பிய புழுதியின்
வழியே எழுந்து
நீ – வந்தாய்.

அப்போது
நித்தம் நித்தம்
மௌனங்களால்
உன்னிடமிருந்து
அந்நியப் படுத்தப்பட்ட
என் ஒருதலைக் காதலை
வார்த்தைகளின்
வாய்ப்புக்காய் காத்திருந்து
உன்னோடு
ஐக்கியப்படுத்தியதாய்
ஓர் ஞாபகம்

சில பிரேரணைகளின்
மத்தியில் நீயும் அதை
ஆமோதித்தாய் – அன்றிலிருந்து
வழிமொழியப்பட்ட
ரகசியம் எனும்
ஊருக்குள்ளேயே
பகிரங்கமாய் நாம்
சந்தித்துக் கொண்டோம்

அவ்வப்போது
பிரேரணையின்
மூலப்பிரதிக்கு மாறாக – நீ
செயற்படும் போதெல்லாம்
நான் எதிர்ப்புத்
தெரிவித்தேன் – நீ அதை
வன்முறை என்று
அடையாளப்படுத்தி
பக்குவப்படுத்திக்
கொண்டாய்!



கற்பனையை காவு
கொடுத்த காதல்
கனவுகளின்
கண்ணோட்டத்தில்
காலத்தைக் கடத்தியது.

இப்போது
குற்றவாளிக் கூண்டில்
நான்

இறந்த காலத்தில்
சந்தர்ப்ப வசத்தின்
பிரத்தியட்சமாய்
நிலுவையில் இருந்த
வழக்குகளில் – நீ
பக்குவப்படுத்திய
உண்மைகள்
விசாரணைப் படிகளில்
சாட்சி ஆதாரமாய்
அணி வகுத்து நின்றன.

ஆப்த வாக்கியமாய்
பிரச்சாரம் செய்யப்பட்ட
வதந்திகளையும் – நீ
துணைக்கழைக்கத்
தவறவில்லை.

நிகழ் காலத்தில்
நிதர்சனப்படுத்தப்பட்ட
நியாயங்களின் நிஜங்கள்
அறியாமலே நிராகரிக்கப்பட்டு
நிர் மூலப்படுத்தப்பட்டதால்
சூழ்நிலைக் கைதியான
நான் – அனுமானத்தின்
அடிப்படையில்
குற்றவாளி ஆனேன்.

எதிர்த்து முறையிட
வார்த்தைகளின் பிரவாகிப்பு
என்னுள் ஆர்ப்பரித்து
எழுந்தாலும்...
பச்சோந்தித்தனமாய்
பகல் வேஷம் போட்டு
உணர்ச்சிகள் செத்து
விட்டதாய் கூறும்
உன் தீர்ப்பின் முன்
கோடையின் கானல் நீராய்
அது ஆகிவிட்டது.

(விமலன்)

---

# அழகு

வாசல் தோறும் யார் வருவார்கள் என்று திறந்திருக்கும் கதவு எல்லோரையும் அனுமதிக் காதது எம்மால்தான். வீட்டில் உள்ளோர் வெளியே சென்றுவரும்போது மட்டும் பூட்டியும் திறக்கவும்தான் எல்லோராலும் முடிகிறது. வாசல் வெளியேதான் இருக்கிறது என்றபோது நீ பூட்டினாலும் திறந்தாலும் வரவேற்றுக் கொண்டிருக்கும் போதுதான் எனது வீடும் ஊரும் அழகாக இருக்கிறது.

கண்களைத் திறந்தாலும், மூடினாலும் ஒன்றுமே தெரியாத இருள் கண்டிப்பாக என்னைத் தூங்க வைத்துவிடும். கண்களை மூடினால் மட்டும் இருளாகவும் திறந்தால் வெளிச்சமாகவும் தெரியும் பகலானது என்னுடைய வாழ்வைத் தெரியப்படுத்திவிடும்போதுதான் அழகான இருப்பிடம் அவசியமானது.



வேலியோடு இருப்பதுதான் வீட்டுக் குப் பாதுகாப்பு கம்பிக் கதவுகளோட இருப்பதுதான் சிறைக்குப் பாதுகாப்பு என்றபோது தனிப்பட்டவனாக்கும் முயற் சிதான் எல்லோருக்கும் பிடித்துக்கொண்ட வாழ்வில் எப்படி விடுபடுவது.

நெருக்கமான நகரில் அடைபட்ட வீடுமட்டும் முற்றத்தினைத் தேடும், பரந்துபட்ட கிராமத்தில் விடுவிக்கப்பட்ட விசாலமான முற்றம் தேடும் நகர வீட்டினை என்றபோதுதான் இழப்பும் மீட்பும் அழகானதாக மாறி மாறி வருகின்றது.

நீண்ட நாட்களுக்குப்பின் சந்திப்பானது புதுமையானதாக வும் எளிமையானதாகவும், உறவு தொடரக்கூடியதாகவும் இருப்பதாயின் இடைக்கிடை தூர இருக்கவேண்டியுள்ளது. ஆனால் உனக்குத் தெரிந்தவர்கள் என்னைக் காணாமலும், எனக்குத் தெரிந்தவர்கள் உன்னைக் காணாமலும் இருத்தல் மட்டும் முடியாமல் உள்ளபோது எப்படி மறப்பது என்றபோது தான் உறவு அழகானது.

பள்ளியில் படித்த கடைசிக் காலப்பகுதியில் நண்பர்களைப் பிரியும்போது மீண்டும் எங்கே சந்திப்போம் என்று தெரியாத நட்பில் நண்பர்கள் அனைவரும் மாறி மாறி அவரவர் கையெழுத்தைப் பதிவுசெய்தபோது நான் மட்டும் யாரிடமும் கையெழுத்துப் பதிவை வாங்காமல் எனது கையெழுத்தையும் பதியாமல் மீண்டும் சந்திப்பேன் என்ற அன்றிலிருந்து எனது கையெழுத்தும் அழகாக ஆனது

ஒவ்வொருநாளும் எமக்குச் சாதகமாகவும், எதிராகவும் நிறையப் பேர்களைச் சந்திக் கின்றோம். வாழ்வுப் பயணத்தில் கண்டிப்பாகப் போய்ச்சேர வேண்டும் என்றபோதுதான் எமது வாழ்வும் அழகானது.

ஊர்த்திருவிழாக் கூட்டத்தில் உன்னைப் பார்த்து பார்த்து நீ பார்க்காதபோதும் கண்டிப்பாக என்னைப் பார்ப்பாய் என்ற நம்பிக்கையில் மீண்டும் மீண்டும் பார்த்திருக்கும் காதல் மட்டும் பிரியும்போதும், சேரும்போதும் அழகாக இருக்கின்றது.

கடும் மழையின் அழிவுகளும், கொடும் வெய்யிலில் கருகிய மரங்களும், நீர் நிலைகள் ஓடி அடையும்போதும், காய்ந்த மேட்டில் மணல் வெடிப்புத் தோன்றும்போதும் எப்படி முடிகிறது அழகாய் இருப்பதற்கு. செயற்கை இல்லாமல் இயற்கையிடம் நிறைந்து காணப்படும்போது தான் எதுவும் அழகானது.

நெடும் தூர இடைவெளியில் ஒவ்வொருநாள் பயணிப்பில், எத்தனை தரிப்பிடங்கள் காத்திருக்கும். எத்தனை சந்திகள் பார்த்திருக்கும். சென்றுவரும் தெருவில் பார்த்துப் போகும் போதும், பார்க்காமல் போகும்போதும் விழுதுக்களில் தப்பிக்கமுடியாத பயணம் அறி முகமாகவில்லை. தப்பிக்கவும் முடியும் ஒருசிலர் என்றபோதுதான், பயணமும் தெருவும் பார்வைக்குள் உள்ளாகின்றது. ஆனாலும் எல்லோரும் போய்வரும் தெருவில் கண்டிப்பாக சில இடங்களில் எல்லோரும் விலகித்தான் அல்லது வழிவிட்டுத்தான் போய்ச்சேரவேண்டி யுள்ளது. இப்படியான பயணத்தில் நடந்து போயினும், ஓடிப்போயினும் சில இடங்களில் வழிவிட்டுத் தான் போகவேண்டியுள்ளது என்றபோதுதான் பயணமும் அழகானது.



துப்பாக்கிமுனை விழித்திருக்கும் ஒவ்வொரு ஊரின் சந்தியிலும், எதிரியின் அரணிலும் என்றைக்குமே அமைதி இருக்காத போது உனது வாழ்வு நடவடிக்கையில் உன்னால் விழித்துக்கொள்ள முடியாது இடைவெளிகளில்தான் தவற வில்லை போராளியாக மாற்றத்தை ஏற்படுத்த என்றபோது தான் பார்வையும், இலக்கும் அழகானது.

விழி விழி இருள் குடித்த நெடுநாள், ஒரு வயதில்கூட வெளியே வந்தாலும், கருவறையில் இருந்து என்னைப் பிரிக்க முடியவில்லை. தொடரும் எனக்கும் உனக்குமான உறவில் மாற்றம் கண்டதுமில்லை. உறவில் மட்டும் தாயாக மட்ட மில்லை.

அரவணைப்பு உனக்கிழைத்தபோதும், மரக்கிளையின் நிழலில் ஆறுதல் அடையும் வேர் என்றபோதும் பெருமை யறியாத உனது பாசம் எனக்கு மிடையே எதனை வேறுபடுத்தி நிற்கிறது உன்னைவிட.

எதிர்பார்ப்புக்குமிடையே என்னை முழுமையாக நம்பவில்லை. ஒரு நாளும் உன்னையும் முழுமையாக நீயே நம்பவில்லை. உனக்கிடையே என்னை முதலில் முழுமையாக நம்பிய உனது உறவு தாய் என அடையாளப்பட்டது. அன்றுதான் அங்கலாய்ப்பு, முடியாத தாகம், கிடைத்து விட்ட மகிழ்ச்சி, எதிர்பார்ப்பில் அழுகை, நிம்மதியான தூக்கம், எனக்குள் நீ அழகாய் இருக்கிறாய்.

வாழ்க்கைப் பயணத்தில் உன்னோடு நானும் நடக்கின்றபோது, எனது கால் வலிக்கின்றதா என்று அடிக்கடி நீ கேட்கும் வார்த்தையில் நான் எதிர்பார்த்ததில்லை. உனது காலும் எனக்காக வலிக்காதபோது தான் எனது தாயும் அழகானவள்.

அமைதி பெறும் தெய்வீகக் கலையின் அங்கங்கள் ஒவ்வொன்றும் மனம் போல எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டி – சுதந்திரமாக, மௌனமாக, இடையூறாக எந்தச் சத்தமும் இல்லாமல் அமைதியாகப் பறந்து கொண்டிருக்கும் பறவைபோல் ஆகிறது.

வானில் தெளிவுபடுத்திய முகில் போல் வந்து வந்து போகின்ற ஆழமான குரல் இசையில், என்றும் வாழும் வாழ்வு, படபடக்கும் எமது ஓட்டத்தில், இதயம் கேட்கும், ரசிக்கும் விதம் எல்லாவற்றையும் மீறி, எமக்குள் எம்மையே அடக்கி வெளிக்கொணர முன்னம் அறிமுகப் படுத்தி விட்டுத்தான் அமைதி பெறவைக்கிறது.

வெள்ளோட்டம் காணாமல் ஒரு தடவையில் வீதி வரும் இசைப் பயணத்தில் ஆழம் உள்ளது, வேகம் உள்ளது, துணிவு உள்ளது, தெளிவுபடுத்தி எமது வாழ்வை மீட்கும்வரை அழகாக நகர்த்திச் செல்லும் இயல்பு இசைக்கு வாய்த்திருப்பது எமது வாழ்வின் அசைவை ஏற்படுத்தும். எந்தப் பொருளிலும் அதிகமாக ஈடுபடுத்திக் கொண்டு அதை இசை உருவில் நடனப்படுத்தி ஆடவைத்தும், அடங்கவைத்தும் கொண்டிருக்கிற இசை அழகானது.

செல்வா

---

## தேடலும் பகிர்தலும்




பின் தொடரும் நிழலில் குரலைப் பத்துப் பக் கங்களுக்கு அப்பால் தொடரமுடியாது போன நினைவில் தயக்கத்துடன் தான் ‘காடு’ நாவலைக் கையிலெடுத்தேன். எடுத்ததுதான் எவ்வளவு நல்ல தாயிற்று!

நாவலைப் படித்து முடித்ததும் என்னுள் எழுந்த எண்ணமெல்லாம் ஒன்றே. இன்றுவரையான தமிழிலக்கிய உச்சங்களிலொன்றாகக் காடு அமையும் என்பதுதான் அது. இதையே இன் னுஞ் சற்று அழுத்தி இன்று வரையிலான தமி ழிலக்கிய ஆளுமைகளின் கூர்ப்பு ஜெயமோகன் தானா? என்ற கேள்வி எழுகிறபோது, தயக்க மில்லாமல் ஒப்புக்கொள் என்கிறது காடு.

பெருநாவல் என்ற வடிவைத் தொடரும் ஆசிரி யரின் ஐந்தாவது நாவல் இது. நிலமானிய அமைப் பின் செல்லவடிவமான இப்பெருநாவல் வகையைப் படைப்பதும், படிப்பதும் இந்தத் தகவல் தொழில் நுட்ப யுகத்தில் எவ்வளவு சாத்தியம்!

பொருத்தப்பாடு உடையது? என்ற கேள் வியையும் மீறி டானியல் நாவல்களின் அச்சுத் தக்ட்டு முறையில் உருவாக்கப்பட்ட உயர்சாதிப் பெண் பாத்திரங்களையொத்த சில பெண்கள் ஆங்காங்கே தலை காட்டுவதையும் தாண்டி, காடு மனதில் மண்டுகிறதென்றால் அதற்குக் காரணங்க ளுள.

முதலில் பிரமிக்க வைக்கிற விடயம் ஆசிரி யரின் பல்துறைசார் அறிவு கூர்த்த உணர்வுடன் இது இணைகையில் விளைகிற அடி அத்தி வாரம்வரை தோண்டத் துடிக்கிற இயல்பான வேகம்தான் கையாளும் களத்தில் ஊறிய பட்டறிவு மற்றயது அறிவு என்கிறபோதும், ஈர்க்கிறவை இரண்டு. ஒன்று பழந்தமிழிலக்கியங்களுடனான அந்தப் பரிசயம். அடுத்தது இன்று பெரிதாக எல்லோராலும் பேச்சளவில் மட்டும் கவனிக்கப்படும் சூழலியல் பற்றி அவருக்கிருக்கும் சத்தியமான பிரக்ஞை.

கதையேகூட காடு போலத் தானிருக்கிறது. புகுந்தால் வெளிவரமுடியாத - வர மனம் வராத – காடு! அந்த உயிரிகளின் பல்வகைமை என்பது கூட மனிதமன உயிரிகளினதும் அவற்றின் இடையறாத் தொழிற்பாட்டின் விளைவான அநுபவங்களினதும் பல்வகைமையோ?

காடு கறுப்பு என்பவை பற்றி எம்மிடையே எப்படியோ? எவராலோ உருவாக்கப்பட்ட எதிர் மறை மனப்பிம்பங்களை இலகுவில் உடைத்துவிடு கிறது நாவல். வெளித்தெரிகிற கதை ஒன்று அதன் அடியில் அல்லது அதைப் பார்க்கிற திசைகளைப் பொறுத்து தெரிகிறவை பல. இன்னுமொன்று, என்ன வென்றால் சொல்லப்பட்ட விடயங்களிலும் பார்க்க, சொல்லப்படாமல் விடப்பட்டவையும் அவை கிளர்த்தும் உணர்வுகளும் அதிகமென்பது.

நனவோடையில் நகர்கிற நாவலின் முதல் அத்தியாயமே அற்புதமான ஒரு தனிச் சிறு கதையாக மிளிர்கிறது! கிரிதரன் நாயரும் எஞ்சி னியர் அய்யரும் எவ்வளவு நுண்ணுணர்வு மிக்க மனிதர்கள்! பாலியல் என்று முகஞ் சுளித்துப் போலித்தூய்மை வாதம் பேசும் வரட்டு ஒற்றைப் பரிமாணிகளாலும், போலி இலக்கியவாதி களாலும் இந்தப் பாத்திரங்களைத் தொட்டுணரத் தானும் இயலுமா?

ஒரு நல்ல இலக்கியத்தை மொழிபெயர்ப்பது முடியாத காரியம் என்பார்கள். காடு அருமையான உதாரணம். பதினைந்திருபது நூற்றாண்டுப் ‘பழம் வேர்’ இன்றி இந்த நாவல் சாத்தியமுமில்லை அதை மொழிபெயர்ப்பில் கொண்டு வருவதும் ! ஆனால் இந்த மொழிஎல்லைகள் தாண்டப்படா மல் குறைந்த பட்சம் ஒரு மான் புக்கரையாவது பெறுவதெங்ஙனம்? அந்த மட்டங்களுக்குக் காடு எவ்விதத்திலும் குறைந்ததல்ல என்றாலும்?

என்றாலும் ‘பரிசு’ தான் இலக்கு அல்ல என்ப தும் உண்மைதான்.

(சாந்தன்)

# கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எண்ணாயிரம் குடும்பங்களுக்கு பால்மா தேவை



## அரசஅதிபர் தி.இராசநாயகம் தெரிவிப்பு

**அண்மையில் பெய்த பலத்த மழை வெள்ளப் பெருக்கு என்பவற்றால் கிளிநொச்சி மாவட்டத்தில் 9ஆயிரத்து 238 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் 1,779 குடும்பங்கள் பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தங்கியுள்ளன. இவர்களுக்கான சமைத்த உணவுகளை உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வழங்கி வருகின்றது.**

7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து- தங்களுடைய உறவினர், நண்பர்கள் வீடுகளிலே வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படாத நிலையில் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

வெள்ளப் பாதிப்புக்கு உள்ளான இந்த மக்களுக்கு அரசால் வழங்கப்பட வேண்டிய நிவாரணம் கூட ஓகஸ்ட் மாதத்துக்குப் பின்பு வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு வெள்ள நிவாரணம் வழங்குமாறு கோரியுள்ளனர். இடம் பெயர்ந்து 3 மாத காலமாக நிவாரணம் வழங்கப்படாத நிலையில், வெள்ள நிவாரணம் வழங்கு மாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளது, நியாயமானது என கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்தார்.

வட்டக்கச்சிக்கும், கிளிநொச்சி நகரத்துக்குமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு படகுச் சேவை நடத்தப்பட்டு வருகிறது. வெலிக்கண்டல் பாலத்துக்கும், கண்டாவளைக்கும் இடையிலான பாதையிலும் படகுச் சேவை நடைபெற்று வருகிறது. இவ்வாறே அக்கராயன் பிரதேசத்தில் 7 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள்- போக்குவரத்துச் செய்துவரும் கிளிநொச்சி இடையிலான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளதால், அங்கும் படகுச் சேவை நடைபெற்று வருகிறது. தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறுவனம் இந்தப் படகுச் சேவையை கடற் தொழிலாளர்களின் ஆதரவுடன் நடத்தி வருகிறது.

பெரும்பாலான குளங்கள் வான் பாய்வதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. மற்றும் பூநகரிக்கான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. குடமுருட்டி ஆறு, மண்டக்கல்லாறு போன்ற ஆறுகளும் பெருக்கெடுத்து ஓடுகின்றன.

பச்சிலைப்பள்ளி உதவி அரச அதிபர் பிரிவில் 2 ஆயிரத்து 212 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. முக்கியமாக இந்த நீர் வழிந்தோட முடியாத அளவுக்கு இராணுவத்தால் அமைக்கப்பட்ட அணைகள், பதுங்கு குழிகள், காவலரண்கள் நீரை கடலுக்கு ஓட விடாமல் தடுத்துள்ளன. காவலரண்கள், மண் அணைகளை வெட்டிவிடவும் முடியாதுள்ளது. அவற்றுள் மிதிவெடிகள் அபாயம் காணப்படுகிறது. நீர் வெளியேறாததால் அங்கு பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பல இடங்களில் மக்கள் பரல் வைத்துத்தான் சமைக்கின்றனர். வெளியே போகவும் விரும்பாத சில குடும்பங்கள் வெள்ளம் சூழ்ந்த குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். ஏனெனில் கடந்த வருடம் வெள்ளத்தால் இடம்பெயர்ந்து, முகாமில் போய் இருந்து, தொற்று நோய் காரணமாக- மக்கள் முகாம்களுக்குப் போகவும் பயப்படுகின்றனர். முகாமில் மலசலகூடமும், கிணறும் தண்ணீரும் ஒன்றாக மேவி வெள்ளம் பாய்கிறது.

இடம்பெயர்ந்த மக்கள் படுக்கை விரிப்புக்கள், பிளாஸ்ரிக் பாய்களை நிலத்தில் போட்டு படுக்கின்றார்கள். பெருமளவு வீடுகள் இடிந்து விழுந்து விட்டன. இந்த மக்கள் கூரைவீரிப்புகள், பிளாஸ்ரிக் பாய்கள், படுக்கை விரிப்புக்கள், குழந்தைகளுக்கான பால்மா என்பவற்றைத் தமக்கு வாங்கித் தருமாறு கோருகின்றனர். 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பால்மா தேவைப்படுகின்றன.

இந்த உதவிகளை ஓரளவு வழங்கி, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற நிறுவனங்கள் தான் பெரிதும் கவனித்து வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து நிதி கிடைக்கவில்லை

வெள்ளப்பாதிப்புக்குள்ளாகி அல்லலுறும் மக்களுக்கு, பிற நிறுவனங்கள் உதவுவதற்கு முன்னர், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனடியாக தன்னிடமுள்ள நிதியைப் பயன்படுத்தி மிக விரைவாக செயற்படுகின்ற தன்மையால், முகாம்களில் உள்ள மக்கள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர் என, கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை தெரிவித்தார்.

தற்பொழுது பெய்து வருகின்ற கடும்மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் உள்ள மக்கள் மிகவும் மோசமான நிலையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்கின்ற பணியில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உடனடியாகவே செயற்பட்டு வருகிறது. சர்வதேச நிறுவனங்கள் தங்களுடைய உதவிகளை வழங்க முன்வருவ தற்கு முன்னே, தமிழர் புனர்வாழ் வுக் கழகம் பாதிப்புக்குள்ளான அந்தந்த இடங்களில் செயற்பட்டு, துரிதமாக மக்களுக்கு உதவி வருகின்றதை நாம் அவதானிக்கிறோம்.

வெள்ளத்தால் சிக்கிய மக்களை பாதுகாப்பாக மீட்பது தொடக்கம், முகாம்களில் தங்க வைத்து பராமரிப்பது வரை தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

சில இடங்களில் தொண்டர்கள் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்துக்கூட, நீந்திச் சென்று மக்களை மீட்டு வந்ததை நான் நேரில் பார்த்தேன்.

அரசால் மக்களுக்கு உதவ உரிய நிதி உடனடியாகக் கிடைப்பதில்லை. சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இந்த உதவிகளைச் செய்வதற்கு பல வகையான கேள்விகளை கேட்டுக் காலம் தாழ்த்துகின்ற சூழ்நிலையில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தன்னிடமுள்ள நிதியை உடனடியாகவே பயன்படுத்தி, மிக விரைவாகவே செயற்படுகின்ற தன்மையை காணக் கூடியதாக இருக்கிறது.

வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களைப் பாதுகாப்பாக மீட்டெடுத்தல், பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்குதல், க.பொ.த. சாதராண தர பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும், நோயாளர்களுக்கும் துரித போக்குவரத்து வசதி செய்து கொடுத்தல், போக்குவரத்து துண்டிக்கப்பட்ட இடங்களில் உழவு இயந்திரங்கள் மூலம் மக்களின் பயணத்துக்கு உதவுதல், சிறுசிறு பாதிப்புக்குள்ளான மக்களுக்கு இதர வசதிகளை வழங்குதல்,

வெள்ள அபாயம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தல், தொற்று நோய்கள் ஏற்படாதவாறு சுகாதார நலன்களை கவனித்தல் எனப் பல சேவைகளை முக்கியமாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னின்று செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## மதுபோதையில் வாகனம் செலுத்தியோர் தமிழீழ காவல்துறையினரால் கைது

மதுபோதையில் வாகனம் செலுத்திய பலர் தமிழீழ காவல் துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏ-9 பிரதான வீதியில் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்திய 25இற்கும் மேற்பட்ட வாகன சாரதிகள் தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தியதற்கான குற்றத்திற்காக 1500 ரூபா வீதம் குற்றப்பணம் அறவிடப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் காலங்களில் மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தும் வாகனச் சாரதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

## பொது மண்டபம் அமைப்பு

மன்னார் சோஆ குடியேற்ற திட்டக் கிராமத்தில் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

ஜே.கா. நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்த பொது மண்டபத்தில், முன்பள்ளி, நூலகம் போன்றன அடங்குகின்றன.

## 2,670 பேர் சிகிச்சை

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையில் கடந்த நவம்பர் மாதத்தில் 2 ஆயிரத்து 670 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதில், 778 பேர் காய்ச்சலாலும், 272 பேர் சுவாசத் தொற்றினாலும், 225 பேர் கடியினாலும், 254 பேர் காயங்களினாலும் ஏனைய நோய்களால் 1,221 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

## இலவசப் பாட நூல்கள் வந்துள்ளன

வவுனியா தெற்கு வலய பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி இலவச பாடநூல்கள் வந்துள்ளன.

2005ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்காக இந்த இலவச பாடநூல்கள் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள பாடநூல்கள், இந்த வலயத்திலுள்ள பாடசாலைக்கு போதுமான அளவு இல்லை என அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.




## அறுபது விவசாயிகளுக்கு விவசாயப் பயிற்சிப்பட்டறை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயப் பயிற்சி வகுப்புக்கள் பிரதேச ரீதியாக அண்மையில் இடம்பெற்று வருகின்றன.

துணுக்காய் பிரதேச கல்விளான், கொல்லவிளான்குளம், மல்லாவி ஆகிய கிர்ாமங்களிலிருந்து 60 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, விவசாயப் பயிற்சிப்பட்டறை வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் வீடு வீடாகச் சென்று விவசாயச் செய்கை தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

## வட்டக்கச்சியில் மேற்கொள்ளப்பட்ட கசிப்பு வேட்டையில் ஒருவர் கைது

வட்டக்கச்சி பிரதேசத்தில் தமிழீழ காவல்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட கசிப்பு வேட்டையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை வட்டக்கச்சி சில்வா வீதியிலுள்ள ஐயனார் ஆலயத்துக்கு அருகிலுள்ள வீட்டில் வைக்கப்பட்டிருந்த கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இவர் பல தடவை குற்றச்செயலகள தொடர்பாக தமிழீழ காவல் துறையினரால கைது செய்யப்பட்டு, விடுதலை செய்யப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (9)

## அடிப்படை வசதிகளின்றி இயங்கிவரும் ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம்

வவுனியா மாவட்ட முகத்தான் குளம் ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம், அடிப்படை வசதிகளின்றிப் பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகிறது.

இந்தப் பாடசாலை - தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இதில் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில், ஒரு தொண்டர் ஆசிரியர் மட்டுமே கல்வி கற்பிக்கின்றார்.

இந்தப் பாடசாலையில் பாட ரீதியாக - ஆசிரியர் பற்றாக்குறை என்ற பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருவதுடன், குடிநீர் வசதியின்மை, கழிப்பறை வசதியின்மை போன்ற அடிப்படைப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

## இறந்து கிடக்கும் கால்நடைகளால் துர்நாற்றம் வீசும் ஒட்டுசுட்டான்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கால்நடைகள் ஆங்காங்கு இறந்து காணப்படுகின்றன.

இந்தக் கால்நடைகளை உரியவர்கள் புதைக்க முன்வராததால், கிராமங்கள் முழுவதும் துர்நாற்றம் வீசுவதுடன், சுகாதார சீர்கேடும் நிலவுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட மக்களின் சுகநல வாழ்வுக்காகவும், தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவும் அவற்றைப் புதைத்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால்நடைகள் கடும் மழையாலும், நோயாலும் இறந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## வவுனியா- புளியங்குளம் பிரதேசத்தில் பொதுநூலகம் அமைக்கப்படவில்லை

வவுனியா-புளியங்குளம் பிரதேசத்தில் பொதுநூலகம் இன்மையால் இந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வவுனியா வடக்குப் பிரதேசத்தில் புளியங்குளம் பகுதியில் பொது நூலகம் இல்லாத நிலையில், 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.நூலக வசதியின்மையால் இவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொண்டு இந்தப் பிரதேசத்திற்கான நூலகம் ஒன்றை அமைத்துத் தருமாறு இந்தப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு*
*தாழ்ச்சியுள் தாங்குதல் தீது.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பேரினவாத ஆட்சியினர் உணர்த்தி நிற்கும் சமகால அரசியல் யதார்த்த நிலைமை...!

நாடு முழுவதிலும் போர்குறித்த அச்சம் சகல மக்களிடையேயும் பெரும் பீதியை ஊட்டும் வகையில் பரவ ஆரம்பித்துள்ளது. கிட்டத்தட்ட மூன்றாண்டுகால அமைதிநிலைக்கான முற்றுப்புள்ளி ஒன்றை நிரந்தரமாகவே வைக்கும் முயற்சிகள் இப்போது வெளிப்படையாகவே மேற்கொள்ளப்படுவதை ஜனாதிபதியினதும் , அரசினதும் அண்மைக்கால அரசியல் மற்றும் இராணுவ நகர்வுகள் நிரூபித்து வருகின்றன.

ஒப்புக்கு ஜனாதிபதியும் அரசில் அவருக்குச் சார்பாக இருக்கும் அவரது சகோதரர் அனுரா உட்பட வேறு சிலரும் இனிமேல் அரசு யுத்தம் ஒன்றை எந்தக் கட்டத்திலும் மேற்கொள்ளப்போவதில்லை என ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தாலும்; அரசின் எல்லாச் செயற்பாடுகளும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நகர்வுகளுக்கு எதிரானதாகவே உள்ளது.

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளக் காட்டிய அவசரம், சீனாவிடம் இருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தை, அமெரிக்காவிடமிருந்து போர்க்கப்பலைப் பெற்றுக்கொள்வதில் காட்டும் தீவிரம், இந்தியாவுடனான கூட்டு கடற்படைப் பயிற்சிகள், பாதுகாப்புச் செலவினத்துக்கென ஒதுக்கப்பட்ட பெருமளவிலான நிதியொதுக்கீடு போன்ற அனைத்துமே சமாதான முன்னெடுப்பு நகர்வுகளுக்கு முரணானவைகளேயாகும்.

புதிய அரசு அமைத்ததும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்போவதாக பெரும் பீடிகையுடன் நோர்வே அனுசரணைக்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி இன்றுவரை எந்தவொரு நம்பிக்கையூட்டும் சமிக்ஞையையும் நோர்வே அனுசரணையாளர்களுக்கு காட்டியதே கிடையாது.

மாறாக மறைமுகமாக அவர்களை அலைக்கழித்து காலம் கடத்தும் உத்தியையே அவர் தொடர்ந்து கையாண்டு வருகிறார் என்பதே உண்மையாகும்.அதன் தாக்கம் நோர்வேயின் சமாதான அனுசரணையாளரின் வாயாலேயே ''போர்நிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது'' என வெளிவந்துவிட்டதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தவார்த்தைகள் சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் குறித்த நம்பிக்கை அவருக்கே சிதைவடையத் தொடங்கி விட்டதை உணர்த்துவதாக உள்ளது.

இது தமிழ் மக்கள் சிந்தித்துச் செயற்படவேண்டிய கட்டமேயாகும். பல தசாப்த காலமாக சிங்களப் பேரினவாத ஆட்சித் தலைமைகளின் அரசியல் ஏமாற்று மூலோபாயங்களுக்குள் சிக்கி; கீழ்த்தரமானதும், மனித உரிமைகளுக்கு விரோதமானதுமான ஒடுக்கு முறைகளுக்கு முகம்கொடுத்து இரு தசாப்தகால கொடிய யுத்தத்தை எதிர்கொண்டு அவலமே வாழ்வாகிப்போன தமிழினம் சிறுமைகண்டு பொங்கியெழும் மனோபாவத்துடன் இன்றுவரை பேரினவாதத் தலைமைகளின் அனைத்து அடக்குமுறைகளையும் தகர்த்து இழப்புக்களுக்கும், இன்னல்களுக்கும் மத்தியில் நிமிர்ந்து நிற்க காரணம் அவர்களை வழிநடத்தித் தலைமைதாங்கும் தலைமையின் தொலை நோக்குச் சிந்தனையும் செயற்பாடுகளுமேயாகும்.

இன்று சிங்கள பேரினதவாத ஆட்சியாளர்களின் இராணுவரீதியிலான தமிழ் அழிப்பு நடவடிக்கைகளை இராணுவரீதியிலேயே எதிர்கொண்டு வரலாறு காணாத வெற்றிகளைப் பெற்று உலகின் பார்வையை தமிழ் மக்களை நோக்கி குவிமையப்படுத்திய அந்தத் தலைமை, அரசியல் ரீதியிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தி சர்வதேசத் தின் புருவங்களை உயரவைத்துள்ள நிலையில், மீண்டும் சிங்கள பேரினவாத ஆட்சியினரின் ஏமாற்றுத் தந்திரோபாயங்களுக்கு சமாதானம் என்ற போர்வையில் காலம் கடத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் பேச்சுவார்த்தை மூலம் நீதியான – நியாயமான தீர்வொன்றை காண்பதற்கு சர்வதேச சமூகத்தின் கண்காணிப்புடன் பேச்சுவார்த்தை ஒன்றினை மேற்கொள்ள தமிழர் தலைமை ஒருதலைப்பட்ச போர்நிறுத்மொன்றை முதலில் அறிவித்து – வழங்கிய வாய்ப்பினை பயன்படுத்த நாம் அனுமதிக்கவே கூடாது.

இந்த மூன்றாண்டு காலப் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களாகிய நாம் அடைந்த பலன்கள் எதுவுமேயில்லை. அதாவது எந்த இலக்கினை நோக்கி – எந்த அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நினைத்துப் பார்க்கவே முடியாத அர்ப்பணிப்புகளையும், தியாகங்களையும் செய்து போராடினோமோ அதில் ஜனநாயக ரீதியில் எதனையும் தர சிங்களத்தலைமைகளின் இதயம் இடம்கொடுக்கவில்லை என்பதையே, இந்த நீண்ட போர்நிறுத்த சமாதானக்காலம் எமக்கு மிகவும் தீர்க்கமாக உணர்த்தியுள்ளது.

இந்த நிலையில் மீண்டும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற தனது சிங்கள இன வெறித்தத்துவத்தை நடைமுறைப் படுத்துவதில் தந்திரோபாயமாக செயற்படும் ஜனாதிபதியும், அவர்தலைமைதாங்கும் சமாதான எதிர்ப்பாளர்களை பெருமளவில் உள்ளடக்கிய அரசும், தமிழ்மக்களை ஒரு அரசியல் – இராணுவ – பொறிக்குள் தள்ள வியூகம் அமைத்து வருகின்றதென்பதை கவனத்தில் கொண்டு அதனை முறியடிக்க நமது தலைமையின் கரத்தைப் பலப்படுத்தவேண்டிய வரலாற்றுக் கடமையை செய்ய விழிப்புணர்வுடன் இயங்கவேண்டிய கட்டத்தில் நிற்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

மனித உரிமைகளை மதிக்கத் தெரிந்த ஜனநாயகப் பண்புகள் அறிந்த தலைமையுடன் சமாதானத் தீர்வு பற்றிப் பேசுவது என்பது ஆக்கபூர்வமானதும் நம்பிக்கையூட்டும் தன்மைகொண்டதுமான விடயமேயாகும்.

இத்தகைய பண்பு எதுவும் சிங்கள ஆட்சித் தலைமைகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே, எமது உரிமைகளையும், விடுதலையையும், தேசத்தையும் மீட்டெடுக்கப் போராடியே ஆகவேண்டும் என்ற அரசியல் யதார்த்தத்தை நாம் புரிந்துகொள்வது அவசியமே ஆகும்.

# நாடும் நடப்பும்




செய்தி :- விடுதலைப் புலிகளின் ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி மத்திய குழு முடிவு.

'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சமஷ்டிக்கு 55 ஆண்டுகள் போல் தமிழீழ அரசு காத்திருக்காது

விடுதலைப் புலிகளுடன், அவர்கள் நோர்வே ஊடாகத் தெரிவித்த யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்கலாம்.

புலிகளுடன் எப்போது பேசுவது, எப்படிப் பேசுவது என்பதெல்லாம் சந்திரிகா அம்மையார் தீர்மானித்துச் செயற்படவேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கான அனுமதியை சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு அம்மையாருக்கு வழங்கியிருக்கிறது. பேச்சுக்கு ஆதரவளிக்கவும், சுதந்திரக் கட்சி மத்தியகுழு தீர்மானித்திருக்கிறது..

பொறுமையின் எல்லைக்கு வந்துவிட்டோம். இனியும் காலம் கடத்தும் தந்திரங்களில் இலங்கை அரசு ஈடுபட்டால் எமது விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதைத் தவிர வேறு வழியில்லை என்று தலைவர் பிரபாகரன் தமது மாவீரர்தின உரையில் தெளிவாகவும், உறுதியாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த உரைக்குச் சிங்கள மேலாண்மைவாதிகளும், அவர்களது ஊடகங்களும் தங்கள் விருப்பப்படி வியாக்கியானம் செய்துவந்தன.

இது மட்டுமல்ல அரசாங்கத்தின் கூட்டமைப்புக்குள் சமாதான முயற்சியில் உடன்பாடில்லையென்பதையும், விடுதலைப் புலிகள் முன்பே எடுத்துக் காட்டியிருந்தனர்.

இதையெல்லாம் மூடி மறைத்து விடுதலைப் புலிகள் மூன்றாகப் பிரிந்துள்ளனர் என்றும், பிரபாகரனின் இராணுவத் தளபதி பிரிந்து போய்விட்டார், கடற்புலித் தளபதி பிரிந்து நிற்கிறார் என்று யாரோ சொன்ன புத்திமதியைக் கேட்டு அம்மையாரும் பொது மேடைகளில் சொல்லி வந்தார்.

ஆனால் தலைவரின் மாவீரர்தின உரை வெறும் பேச்சல்ல, வெருட்டும் பேச்சுமல்ல, அது செயல் வீரனின் உரையென்பதைச் சொல்லவேண்டியவர்கள் சொல்ல வேண்டிய முறையில் சொன்னபிறகே உறைத்திருக்கிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முக்கியமான ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா ஆகியவைகளின் பிரதிநிதிகள் அம்மையாரைச் சந்தித்து நிலைமையைக் கொஞ்சம் உறைக்கவே சொல்லியிருக்கிறார்கள்.

இந்த நாடுகளுக்கு வெவ்வேறு நோக்கங்கள் இருந்தாலும் அம்மையாருடன் கூட்டுச் சேர்ந்திருப்பவர்கள் முதலுக்கே மோசம் செய்துவிடுவார்கள் போலிருக்கே என்பதை உணர்த்தியிருப்பதை சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எடுத்துக் காட்டுவதாகவே சொல்லலாம்.

சமஷ்டி என்ற வார்த்தை கசப்பாகிவிட்டதாகக் கருதிப் பிராந்தியசபைகள் என்று சொன்னார்கள்.பின்னர், இதுவும் வெறுப்பாகி மாவட்டசபைகள் என்று மாற்றினார்கள். தொடர்ந்து ஒன்றுமேயில்லை ஒற்றையாட்சிதான் என்றார்கள்.

இன்று இடைக்காலத் தன்னாதிக்க அதிகாரசபை என்றதுமே யுத்தத்தைக் காண்பதுபோல மிரண்டு நிற்கிறார்கள்.

இடைக்கால அரசே இப்பொழுது தமிழர் தாயகத்தின் பெரும்பரப்பில் இயங்கிக் கொண்டிருக்கிறதென்பது தெளிவாகத் தெரிந்ததும் - ஒஸ்லோவில் "பிரகடனப் படுத்திய" சமஷ்டி அமைப்புப் பற்றிப் பேசுவோம் என்கிறார்கள்.

1949 ஆம் ஆண்டின் இறுதியில் தந்தை செல்வா தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி உதயமானபோது அது தமிழர் தாயகத்துக்குச் சுயாட்சி வழங்கும் சமஷ்டி ஆட்சி அமைப்பை இலங்கையில் ஏற்படுத்த வேண்டுமென்றே கோரியது.

"சமஷ்டி நாட்டைத் துண்டாடும்" என்று சிங்கள மேலாண்மைவாதிகள் வெறுத்து ஒதுக்கினர்.

சமஷ்டிக் கோரிக்கையை வென்றெடுப்பதற்காகத் தந்தை செல்வா தலைமையில் நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு உள்ளே ஜனநாயக ரீதியில் தமிழரசுக் கட்சியினர் வாதிட்டுப் போராடினார்கள்.

ஆனால், இலங்கையின் ஒற்றையாட்சியில், சிங்களப் பெரும்பான்மை ஜனநாயகமே வெற்றியீட்டியது.

நாடாளுமன்றத்துக்கு வெளியே காந்தீய வழியில் சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள், கடையடைப்பு என்று தந்தை செல்வா தலைமையில் தமிழ் மக்களும், தமிழரசுக் கட்சியும் சாத்வீகப் போராட்டங்கள் நடத்தினார்கள்.

இவற்றையெல்லாம் ஆயுதப் படைகளையும், காடையர்களையும் - ஆட்சி அதிகாரத்திலிருந்தோரும், சிங்கள மேலாண்மைவாதிகளும் ஏவிவிட்டு தமிழ் இன ஒழிப்பில் ஈடுபட்டனர்.

சாத்வீகம் தமிழ் மக்களைக் காப்பாற்றாது என்றறிந்த இளைஞர்கள் பிரபாகரன் தலைமையில் இழந்த தமிழீழ அரசை மீண்டும் பெறுவதற்கு ஆயுதம் ஏந்தினார்கள்.

"அடி உதவுவதுபோல வேறெதுவும் உதவாது என்பதை" உணர்த்தி -

இன்று தமிழ் ஈழம் என்ற சொல் உலக நாடுகளில் உச்சரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில்தான் முன்னர் கசப்பாகவும், வெறுப்பாகவும் தெரிந்த சமஷ்டி பற்றி ஐம்பத்தைந்து ஆண்டுகளின் பின் பொருத்தமாகத் தெரிகிறது.

சமஷ்டி பற்றிச் சொல்வதற்குக் காத்திருந்து பல இழப்புக்களைச் சந்தித்ததுபோல இன்னுமொரு ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்குத் தமிழீழ அரசு காத்திருக்க முடியாது.

சாத்வீகப் போராட்ட காலத்தில் போராட்டத்தில் அமைதியாக, நிராயுதபாணிகளாகப் பங்குபற்றிய அறப்போராளிகளை ஆயுதப்படைகளும், காடையர்களும் சித்திரவதை செய்தார்களா. கைதுசெய்து சிறையிலடைத்தார்கள். காலத்துக்குக்காலம் நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டு இனப்படு கொலைகளைக் கட்டவிழ்த்து விட்டார்கள். தமிழர்கள் தேடிய சொத் துக்களை நாசமாக்கினார்கள்.

தமிழ் இளைஞர்களின் கல்வி, வேலைவாய்ப்புக்களுக்கும் குழி தோண்டினார்கள். இந்தக் காலத்தில் தமிழர்கள் பட்ட அவலங்களும், அவர்கள் விட்ட கண்ணீரும், அவர்கள் எழுப்பிய ஓலங்களும் அயலிலுள்ள காந்தி நாட்டுக்குக்கூடச் சரியாகக் கேட்கவில்லை, கேட்டும் கேட்காதமாதிரி அயலவர்கள் நரசிம்மர்களாக வாய்மூடி இருந்தனர். இன்று ஆயுதங்களின் ஒலியும், வெடியோசையும் கேட்டபின்னர்தான் அயலவர்களும் தங்கள் நலன் பற்றியும் பேசுகிறார்கள்.

அயலவர்களைவிட இலங்கையின் நலனில் நாங்கள்தான் அக்கறைகொண்டு - கிழக்குப் பாகிஸ்தான் போர்க் காலத்தில் இலங்கை செய்த உதவிக்கு நன்றியாக யாழ்ப்பாணம் போர்ச்சூழலில் ஆயுதங்கள் கொடுத்தோம் என்று பாகிஸ்தான் சொன்னபின்னர்தான் இலங்கையுடன் செய்துகொள்ளமுனைந்த ஒப்பந்தத்தை இந்தியா மறுபரிசீலனை செய்துவருவதாகத் தோன்றுகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கும், சமாதானத்திற்கும் உதவுவதாகச் சொல்லும் நாடுகள் எல்லாம் தமது சுயநலத்துடன்தான் செயற்படுவது எல்லோரும் அறிந்தததுதான்.

சாத்வீகப் போராட்டத்தில் தமிழ் மக்களுக்கே உயிரிழப்பு ஏற்பட்டது. ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் சிங்கள இளைஞர்களுக்கும் சிங்களப் பொதுமக்களுக்கும் பெருமளவில் ஏற்பட்டதை சிங்களப் பொதுமக்கள் நினைத்துப்பார்க்கவேண்டும்.

அம்மையாரும் சிங்களப் பொதுமக்களும் சிந்தித்துச் செயல்படவேண்டிய காலம் நெருங்கி வந்துவிட்டது.

# சட்டவிரோத மின்சாரம் பெறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

## சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம்

சங்கானைப் பிரதேசத்தில் சட்டவிரேதமாக மின்சாரம் பெற்று வருவோரைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதேச செயலகம் தீர்மானித்துள்ளது.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புப் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கக்கப்பட்டது.

இந்தக் குழுக்கூட்டத்தின் முக்கிய தீர்மானமாக, சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சகல பிரதேசங்களிலும் சட்டவிரோத மின்பாவனையைக் கட்டுப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதன் முதற் கட்டமாக இந்தப் பிரதேச மின் அத்தியட்சகரை பொலிஸாருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்படி கோரப்பட்டது. வலிமேற்குப் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துச் செல்வதாக பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதை அடுத்தே, இந்த நடவடிக்கை உடனடியாக அமுல்படுத்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் வலிமேற்கின் பிரபல பாடசாலையான சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் பாடசாலை தொடங்கும் நேரமும், முடியும் நேரமும் பொலிஸ் கண்காணிப்பைப் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்தப் பாடசாலையில் குறிப்பிட்ட நேரங்களில் இளைஞர்கள் சிலர் மாணவிகளுடன் சேஷ்டை புரிந்து வருவதால் இந்த நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (207)

# வலி. கிழக்கில் வீதிகள் மீள் திருத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு பிரதேசசபையினால் வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், வீதிகள் மீள் திருத்தம் நடவடிக்கைகளுக்கு பிரதேசசபையின் நிதிமூலத்தில் இருந்து நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் புத்தூர் வாதரவத்தை வீதி, அச்சுவேலி பஸ் நிலைய சுற்றுவட்டம், உரும்பிராய்- பலாலி வீதி, இருபாலை முனிகோயில் வீதி, புத்தூர் வீதி, உரும்பிராய் அரசவீதி ஆகிய வீதிகள் திருத்தப்பட்டு மீள் தாரிட தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் உரும்பிராய் செல்லப்பா வீதியும் திருத்த வேலை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவற்றுள் சில வீதிகள் திருத்த வேலைகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. மிகுதி வீதிகள் மிக விரைவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் வலி. கிழக்கு பிரதேசசபையினர் தெரிவித்தனர். (90)

# கால்நடை வளர்ப்போருக்கு மந்திகையில் கலந்துரையாடல்

வடமராட்சிப் பிரதேசத்தில் விலங்கு வேளாண்மை, கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும், அவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது தொடர்பாகவும் கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி, மந்திகையிலுள்ள பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டொக்டர் சி.வசீகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில், யாழ். பல்கலைக் கழக விவசாயபீட விலங்கு வேளாண்மைத்துறைத் தலைவர் பேராசிரியர் அ.நவரத்தினராசா கலந்துகொண்டு விளக்கமளிப்பார். (14)

# ஆழ்கடல் மீன்பிடித்தொழிலுக்கு வசதியாக தொலைத்தொடர்பு கோபுரத்தில் மின்விளக்கு

## பருத்தித்துறை பிரதேச செயலர் ஆராய்வு

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேச மீனவர்களின் நன்மை கருதி, தொலைத் தொடர்புக் கோபுரத்தில் மின் விளக்கைப் பொருத்தலாமென வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர் வசந்தகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போதே வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பருத்தித்துறை முனையிலுள்ள வெளிச்ச வீடு நீண்ட காலமாக இயங்காத நிலையில் இருந்து வருகிறது.

எனவே மீனவர்களின் இந்தப் பிரச்சினையைத் தற்காலிகமாகத் தீர்த்து வைக்கும்பொருட்டு, பருத்தித்துறை ஓராங்கட்டை - தம்பசிட்டி வீதியிலுள்ள டயலொக் தொலைத் தொடர்புக் கோபுரத்தில் மின் விளக்கு ஒன்றைப் பொருத்தி எரியவிடலாமென ஆலோசனை நடத்தப்பட்டது. இதற்கான இறுதித் தீர்மானத்தை அடுத்த கூட்டத்தில் நிறைவேற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (14)

# பெற்றோல் தீப்பற்றியதில் இளைஞன் படுகாயம்!

மண்ணெண்ணை என நினைத்து பெற்றோலை, எரிந்து கொண்டிருந்த லாம்பிற்குள் ஊற்றியபோது தீ பற்றிக்கொண்டதால், பலத்த தீக் காயங்களுடன் இளைஞர் ஒருவர் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த புளியம் பொக்கணையைச் சேர்ந்த திருஞானம் யோகேஸ்வரன் (வயது 25) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கடந்த 16ஆம் திகதி தனது வீட்டுத் தேவைக்கு மண்ணெண்ணை வாங்குவதற்கு கடையொன்றில் கொள்கலனைக் கொடுத்துள்ளார். கடைக்காரரும் கொள்கலனை வாங்கி மண்ணெண்ணையென நினைத்து பெற்றோலை ஊற்றிக் கொடுத்துள்ளார்.

இந்த நபர் இதனை அறியாமல் வீட்டில் எரிந்துகொண்டிருந்த லாம்பிற்குள் இதனை ஊற்றியுள்ளார். அப்போது தீப்பற்றிக் கொண்டது.

இதனால் இவர் பலத்த எரி காயங்களுக்கு உள்ளாகினார். இவரை சுதந்திரபுரம் வைத்தியசாலையில் அனுமதித்து, பின்னர் கிளிநொச்சி போதனா வைத்தியசாலையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# சமுர்த்தி நிவாரணப் படிவங்கள் அனுப்பி வைப்பு

எதிர்வரும் நிதி ஆண்டுக்கான சமுர்ததி நிவாரணத் திட்த்தை அமுல்படுத்துவதற்கான படிவங்கள், தென்மராட்சிப் பிரதேசசெயலர் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்தப் படிவங்கள் கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர்கள் ஊடாகப் பொதுமக்களுக்கு வழங்கிப் பூர்த்தி செய்யப்படவுள்ளது. (29)

# வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை -2004

இலங்கை கணக்காய்வு சேவையின் II ஆம் வகுப்பு முதலாம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நாளைய தினமும், இதேசேவையின் இரண்டாம் வகுப்பு இரண்டாம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான 2004 ஆம் ஆண்டுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதியும் கொழும்பில் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதனுடன் மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர் 3-III இற்கான பதவியுயர்வுப் பரீட்சையும் இநத மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (31)

தகவல் தொழில்நுட்பம்... த.தவரூபன்

# மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும்

சிங்கப்பூரில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழர் தகவல் தொழில்நுட்ப மாநாட்டில் 'வெப்.தமிழன்' இணையத்தள ஆசிரியர் தவரூபன் சமர்ப்பித்த கட்டுரை...

*(தொடர்ச்சி....)*

பொதுவாக ஆராய்ச்சி என்று வந்துவிட்டால் அதற்கான பொருள், பணபலம் தான் முக்கிய பிரச்சினையாக உள்ளது. அந்த வகையில் இந்த ஆய்வுகூடம் எமது மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாமாகும். இதிலே, ஒவ்வொரு மொழி சார்ந்த மாணவர்களும், தத்தமது மொழி சம்பந்தமான நல்ல வெளியீடுகளைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் சேவை தனது ஒலிபரப்பை இணையத்தில் இருந்து நேரடியாக மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. இது ஒரு மைல் கல் என்றே சொல்லவேண்டும். இவ்வாறான முன்னேற்றங்கள் இலங்கை தகவல் தொழில்நுட்பத்தில் பிரகாசமான பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. அதேபோல், சக்தி பண்பலை வானொலி இலங்கையில் இருந்து உலகெங்கும் ஒலிக்கிறது. மொத்தத்தில் இங்கே ஈழத்தில் தகவல் தொழில்நுட்பம் மொழியியல் ரீதியாக முன்னேற்றப் படிகளில் சென்றுகொண்டிருக்கின்ற அதேகணத்தில் ஈழத்தமிழர்களின் குரல் உலகமெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

இங்கே ஊடகங்களைப் பொறுத்தவரையில், பத்திரிகைகளால் செய்யப்படும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பிரசாரங்களுக்குக் கூடுதலாக இலத்திரனியல் ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இந்த நிலை மாறவேண்டும். மக்களை வெறுமனே பொழுதுபோக்குவதைத் தூண்டுவதாக மட்டுமன்றி அவர்களைச் சிந்திக்க வைக்கும் வகையிலும் புதிய தொழில் நுட்பங்கள் பற்றி அறிந்துகொள்ளச் செய்யும் வகையிலும், அவர்களது உருவாக்கும் திறனை வளர்ப்பதாகவும் இலத்திரனியல் ஊடகங்களின் நிகழ்ச்சிகள் அமையவேண்டும்.

மக்களுக்கு எது அவசியமோ அதனை வழங்க வேண்டுமே தவிர அவாகளைச் சிந்திக்க முடியாத சடங்களாக மாற்றித் தம்வழியில் இவர்களை அழைத்துச் செல்லும் வகையில் ஊடகங்கள் தொழிற்படுவதை நிறுத்தவேண்டும். எனவே இனிவரும் காலங்களிலாவது நாடுமுழுவதும் தகவல் தொழில் நுட்பக்கல்வியை வளர்த்தெடுக்க ஈழத்து ஊடகங்கள் முன்வரவேண்டும். இங்கு கணினிச்சஞ்சிகைகள் என ஒரு சிலவே வெளிவருகின்றன. தமிழில் காலத்துக்கு காலம் வந்து, பின் தொடர்ந்தும் வெளிவரமுடியாமல் இருக்கின்றமையே அதிகம். தற்போது தரமான கணினிச் சஞ்சிகைகளுக்காக அயல் நாடான இந்தியாவை எதிாபார்த்திருக்க வேண்டிய நிலை இருக்கின்றது.

இதற்கிடையில் ஈழத்தமிழர்கள் ஆவணங்களைக் காப்பதற்கும், இலத்திரனியல்படுத்தவும் எனப் பல அமைப்புகள் தோன்றி மறைந்திருக்கின்றன. சில புலம்பெயர்ந்த நாடுகளில இயங்குகின்றன. அந்த வகையில் ஈழத்தமிழர் ஆவணக் காப்பகம் (www.esuvadi.org) என்ற அமைப்பு, தற்போது உருவாக்கம் பெற்றிருக்கின்றது. இளையத்தலை முறையினரால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும், இந்த முயற்சிக்கு ஆரம்பத்திலேயே பலர் ஆதரவாகவும், சிலர் சந்தேகத் தொனியிலும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்ற போதிலும், இவ்வாறான ஒரு அமைப்பு இங்கு அவசியமானதொன்றாகவே நான் கருதுகின்றேன்.

அதற்குக் காரணம் இருக்கின்றது. மதுரைத்திட்டம், தமிழ் ஆவணக்காப்பகம் போன்ற செயற்பாடுகளை முன்னெடுததுக் கொண்டிருந்தாலும், அவர்களால் ஈழத்தில் எல்லாப்பகுதிகளுக்கும் ஊடுருவுவது என்பது நடைமுறைக்குச் சற்றுச் சிக்கலானதொன்றாகும். இந்த நிலையில் பிராந்திய ரீதியில் இவ்வாறான அமைப்புக்கள் ஆரம்பித்தால் உலகளாவிய ரீதியிலும் நாடளாவிய ரீதியிலும், மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் என நம்புகின்றேன்.

எது எப்படியிருந்த போதிலும், ஈழத்தில் மின்னரசு ஒன்றுக்கான செயல்வடிவம் வெற்றிபெறுவதற்கு அடிப்படைக்காரணிகளில் இன்னும் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது. கிராமிய மட்டத்தில் அடிப்படைக்கணினிப் பயிற்சி, ஆரம்பக்கல்வியில் கணினி கல்வியை புகுத்தல், உயர் கல்வியில் ஏற்கனவே உள்ள வாய்ப்புக்களை அதிகரித்தல், எழுந்துரு விசைப்பலகை முறையில் தரப்படுத்தியவற்றை அனைவரினதும் உபயோகத்துக்கும் பரவலாக்கல், இணையப் பாவனையை ஊக்குவிப்பதற்கான ஏது நிலைகளை ஏற்படுத்தித்தரல், தமிழ், சிங்கள மொழிகளுக்கான கலைச்சொல அகராதியில் இருக்கக்கூடிய மயக்கங்களை நீக்கி அவற்றை மக்களிடையே பரவலாக்கல், அனைத்து விடயங்களிலும் கணனி மயப்படுத்தலை விரைவு படுத்தல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ரீதியில் ஈழத்தில் அனைத்து பிரதேசங்களினதும், மக்களினதும் பங்களிப்பை உறுதி செய்தல் என்பன குறிப்பிடத்தக்கன.

ஈழத்தில் கிராமிய மட்டத்தில் கணனி அறிவு பூச்சியம் என்று எவராலும் கூறமுடியாவிட்டாலும் , எய்தப்படவேண்டிய இலக்கு என்னவோ சற்றுத்தூரத்தில்தான் இருக்கின்றது. TITA, ICTA மற்றும் வன்னி தொழில்நுட்ப நிறுவகம், ஐக்கிய நாடுகள் உதவித் திட்டங்கள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், இந்து, கிறிஸ்தவ சமய சம்பந்தமான நிலையங்கள் ஆகியன குறிப்பிடத்தக்களவில் கிராமிய மட்டத்தில், குறிப்பாக வறிய மாணவர்களுக்கு இலவசமான கணனிக் கற்கை நெறிகளை வழங்கிவரு கின்றமை ஏற்கனவே குறிப்பிட்டபடி கிராமிய மட்டத்தில் அடிப்படை கணனிக் கல்வியை வளர்த்து வரும் அதே வேளையில்,

இன்னும் கணனி மாணவர்களுக்கு மட்டும்தான் என்றும், நமக்கு சரிப்பட்டுவராது என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களையும், கணனி பயன்பாட்டையும் கண்டு வியந்து, பெருமூச்சு விட்டுக்கொண்டிருப்பவர்களும் நிறையவே இருக்கின்றார்கள். கடந்த கால யுத்த அனர்த்தங்களின் காரணமாக வடக்கு, கிழக்கின பெரும்பாலான கிராமங்களில் இந்த நிலை கூடுதலாகக் காணப்படுகின்றது. போரின் கொடுமை எமது மக்களை பெருமளவில் அடிப்படை கணனி அறிவைக்கூட பெறுவதற்கான ஏதுநிலைகளை இல்லாமல் செய்துவிட்டிருக்கிறது.

எது எப்படியிருந்த போதிலும், தற்போது நிலவுகின்ற ஒரு விதமான சுமுகநிலையில் மேற்சொன்ன பிற்பட்ட நிலையில் இருந்து கொண்டிருந்த ம்க்களை தகவல் தொழில் நுட்பம் தேடிச் சென்று கொண்டிருக்கின்றது. இதற்கு வழி வகைகள் செய்து கொண்டிருக்கும் ஒவ்வொரு அமைப்பும், இவை அரச சார்புடையதாக இருந்தாலென்ன அரசசார்பற்றவைகளாயிருந்தாலென்ன பாராட்டுவது முக்கியமானதாகும்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பக்கல்வியில் தகவல் தொழில் நுடபம் என்பது இப்பொழுதுதான் துளிர்விடத் தொடங்கியுள்ளது. இதுவரைகாலமும் அது பூச்சிய நிலையிலேயே இருந்து வந்துள்ளது. இடைநிலைக்கல்வியில் கணினிக் கற்கை நெறிகள் சில காலத்துக்க முன்னரேயே ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், வளங்களின்மையால் வெறுமனே கணினிகளைப் பார்த்து அறிதல் மட்டுமே சாத்தியமாயிருந்தது.

தற்போது பாடசாலைகளில் இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கும் கணினி கற்பிக்கப்படுகின்றது. நாம் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்த காலப் பகுதியில் எல்லாம் கணிணிக் கூடத்தைப் பார்க்கக் கூடிய வசதி கிடைத்தது. ஆனால் பயன்படுத்தப் படும் வசதி அரிதாயிருந்தது. அந்தக் காலப்பகுதியில் வடக்கு கிழக்கு உள்ளிட்ட பல பின் தங்கிய பாதிக்கப்பட்ட மாவட்டங்களல் கணினிகள் கொண்டு வரப்பட்டு அறைகளுக்குள் பயன்பாடின்றி முடங்கிக்கிடந்தன. சில இடங்களில் ஒரு சிலரது தனிப்பட்ட பாவனைகளுக்கு மட்டும் உடபடுத்தப்பட்டிருந்தன.

இவற்றுக்கெல்லாம் முக்கிய காரணமாக கணணிக் கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கை இங்கு குறைவாக இருந்தமையும், கணிணிக் கல்வியானது, பரீட்சையினை மாத்திரமே இலக்காக கொண்ட எமது கல்விச் செயறபாடுகளில் அவசியமில்லாமலிருந்தமையும் காரணங்களாகக் கொள்ளலாம்.

*(தொடரும்)*

# நேபாள மாவோ கிளர்ச்சிவாதிகள் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்!

நேபாளத்தின் மாவோ கிளர்ச்சிவாதிகள் பொலிஸ் நிலையமொன்றின் மீது நடத்திய தாக்குதலில் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட நான்கு பொலிஸாரில் ஒருவர் இன்ஸ்பெக்டர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேபாள தலைநகர் காத்மண்டுவிலிருந்து 15கி.மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது தலைநகருக்குச் சற்றுத் தொலைவில் மாவோ கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்தியிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

தலைநகர் பகுதியில் மாவோ கிளர்ச்சிவாதிகள் முன்னர் நடத்திய தாக்குதல்கள் அரசாங்கக் கட்டடங்கள் மீதும் பாதுகாப்பு அதிகாரிகள் மீதும் நடத்தப்பட்டதாகவே இருந்தது. அதுவும் அரசாங்கக் கட்டங்கள்



மீது கிளர்ச்சிவாதிகள் கிரனைட் தாக்குதல்களையே நடத்தி வந்தனர். தற்போதுதான் முதன்முறையாக கிளர்ச்சிவாதிகள் பொலிஸ் நிலையமொன்றைத் தாக்கியுள்ளனர்.

சுமார் 60 கிளர்ச்சிவாதிகள் வாகனத்தில் வந்து பொலிஸ் நிலையம் மீது தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கு முதல்நாள் பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் மேலதிகமாக 10 பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் நேபாளத்தின் மேற்குப் பகுதியில் படையினருக்கும், கிளர்ச்சிவாதிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதல்களில் இரு பகுதியிலுமாக சேர்த்து 60 பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




## ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல் 13 பேர் பலி; முப்பதுபேர் காயம்!

ஈராக்கின் கர்பாலா நகரில் உள்ள பிரதான பஸ்தரிப்பு நிலையம் ஒன்றில் இடம்பெற்ற கார் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

கர்பலா நகரில் பஸ்தரிப்பு நிலையத்தில் பயணிகள் கூடியிருந்தவேளை வெடிகுண்டு நிரப்பிய காரினைச்செலுத்திவந்த தற்கொலைக் குண்டுதாரி பஸ்தரிப்பு நிலையத்தின் முன் குண்டினை வெடிக்க வைத்துள்ளார்.

குண்டுத்தாக்குதலினால் பஸ்தரிப்பு நிலையத்துக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த 10 கார்கள் தீப்பற்றி முற்றாக எரிந்துள்ள அதேசமயம் 10ற்கும் மேற்பட்ட மினி பஸ்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

பஸ்தரிப்பு நிலையத்தில் பெரும் புகையுடன் தீச்சுவாலை எழுந்ததைத் தொடர்ந்து தீயணைப்புப் படையினர் அழைக்கப்பட்டு, தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் அல் ஹுசைன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள இமாம் ஹீசைன் பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 85 பேர் கொல்லப்பட்டதுடன் 100 பேர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

# கொங்கோ நாட்டுக்குள் வேறும்பல வெளிநாட்டுப் படைகள் நுழைவு

## ஐ.நா.கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இருந்து றுவாண்டாப் படைகள் வெளியேற்றப்பட்ட பின்னர் வேறு வெளிநாட்டுப் படைகள் கொங்கோக் குடியரசின் கிழக்குப் பகுதியூடாக உள்நுழைந்ததாக கொங்கோவில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

றுவாண்டாப் படைகளால் கொங்கோங் குடியரசிற்கு ஏற்பட்ட அச்சுறுத்தல் முற்றாக நீக்கப்பட்டுள்ளதை ஊர்ஜிதம் செய்யமுடியாதுள்ளவேளையில் வெளிநாட்டுப் படைகள் கொங்கோவுக்கு நுழைந்துள்ளமையானது பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் என



அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டுப் படைகள் ஊடுருவியதாக நம்பப்படும் பகுதிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புப் படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளபோதும், கொங்கோ குடியரசில் உள்ள நெருக்கடிகளை தீர்க்கும் பிரிவு, ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புப் பிரிவின் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள ஓட்டைகளாலேயே வெளிநாட்டுப் படைகள் கொங்கோவிற்குள் நுழைந்துள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதனையடுத்து மேலதிகமாக 12'000 கண்காணிப்புப் படையினர் கொங்கோவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

## கர்ப்பிணியை கொன்றபின்னர் அவரது வயிற்றிலிருந்த சிசு திருட்டு

[illegible] அமெரிக்காவில் மிஜோ பகுதியிலுள்ள [illegible]போர் என்ற இடத்தில் வசித்து வந்தவர் பாப்பி ஸ்டின்னிட் (வயது 23) இவர் 8 மாத கர்ப்பிணியாக இருந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது வீட்டில் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். அவரது வயிறு கிழிக்கப்பட்ட நிலையில் கருவில் இருந்த சிசுவைக காணவில்லை.

குழந்தைக்காக யாரோ இந்தக் கொலையை செய்ததோடு 8 மாத சிசுவையும் கடத்தி இருப்பதாக பொலிஸார் கருதினர். பொலிஸார் விரித்த வலையில் 24 மணி நேரத்தில் கொலைசெய்த சூத்திரதாரி சிக்கினார். அவரிடமிருந்து 8 மாத சிசு மீட்கப்பட்டது.

பிடிபட்ட பெண்ணின் பெயர் லிசா (வயது 36) திருமணமான அவருக்கு 2 குழந்தைகளும் உள்ளனர். அவருடைய இந்த கொடூர செயலுக்கான காரணம் தெரியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட குழந்தை மரபணு சோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. பிடிபட்ட பெண்மீது கடத்தல் மற்றும் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை கிடைக்கும் என நம்பப்படுகிறது.

# லெபனானின் 3 இடங்களிலுள்ள சிரிய துருப்புக்கள் குறைக்கப்பட்டன

லெபனானின் மூன்று முக்கிய இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள சிரிய துருப்பினரில் ஒரு சிறு தொகுதியினரை சிரியா தமது நாட்டுக்கு மீள திருப்பியழைத்துள்ளதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன்படி லெபனானின் வடபகுதி நகரான பற்ரூன், பெய்ரூட் மற்றும் தென்பகுதி நகரில் அமைந்துள்ள முக்கிய விமான நிலையம் போன்றவற்றில் நிறுத்தப்பட்டுள்ள படையினரில் ஒரு தொகுதியினரே விலக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்கூட்டம் நடந்தவேளை - பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் லெபனானில் வெளிநாட்டுப்படைகள் நிலைகொண்டுள்ளதாகத் தெரிவித்தபோதும் சிரியாவின் பெயரைக் குறிப்பிடவில்லை. இந்த நிலையிலேயே 3000 துருப்பினர் லெபனானில் இருந்து விலக்கப்படுவதாக சிரியா தெரிவித்தபோதிலும் இந்தத் தொகை போதுமானதாக இல்லையென ஐ.நா. தெரிவித்துள்ளது.

லெபனானில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் 1990ஆம் ஆண்டு முடிவுக்கு வந்து அங்கு ஸ்திரமான நிலையேற்பட சிரிய துருப்பினரே காரணம் என சிரிய மற்றும்



லெபனான் நாடுகள் தெரிவித்தன.

ஆனால் லெபனானின் பாதுகாப்பு ஐ.நாவின் தீர்விலேயே தங்கியுள்ளதெனவும் இதற்கு ஒரே வழி லெபனான் மீதான சிரியாவின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதே எனவும் லெபனானின் எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

1976ஆம் ஆண்டில் லெபனானில் உள்நாட்டுப்போர் ஆரம்பமானவேளை சிரியா தனது முதலாவது படைப்பிரிவை அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# டர்பூரில் நடத்தப்படும் படை நடவழிக்கையை சூடான் இராணுவம் உடன் நிறுத்தவேண்டும்

## அனுசரணையாளர்கள் காலக்கெடு விதிப்பு

போரால் சிதைவடைந்த டர்பூர் பிரதேசத்தில் சூடான் இராணுவம் மேற்கொண்டு வரும் படைநடவடிக்கையை நிறுத்தவேண்டுமென - ஆபிரிக்க யூனியன் விடுத்த காலக்



கெடுவை இராணுவம் உதாசீனம் செய்துள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த யூனியன் பேச்சாளர் அஸ்ஸானி பா - டர்பூரின் தென்பகுதியில் படையினர் தொடர்ந்தும் படைநடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக டர்பூரிலுள்ள ஆபிரிக்க யூனியனின் யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்கள் சர்வதேச அனுசரணையாளர்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

தற்போதும் பெருமளவு படையினர் அப்பகுதியில் தாக்குதலை நடத்திவரும் அதேவேளை, ஹெலிகொப்டர்களும் தாக்குதலை நடத்தி வருகின்றன. அப்பகுதியிலுள்ள படையினர் பொதுமக்களின் வீடுகளில் கொள்ளையடித்து வருகின்றனர்.

ஆனால் கிளர்ச்சிவாதிகள் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் இந்தப் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளதுடன் பொதுமக்கள் மற்றும் அவர்களது சொத்துக்கள்மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். எனவே இவர்களை இந்த இடத்திலிருந்து வெளியேற்றவே படைநடவடிக்கை இடம்பெறுவதாக சூடானின் வெளியுறவு அமைச்சர் முஸ்தபா ஒஸ்மான் இஸ்மாயில் தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் பகுதிகளில் கிளர்ச்சிவாதிகள் வீதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளதனால், அவர்களை அப்பகுதியிலிருந்து வெளியேற்றி மனிதாபிமான உதவிகளை பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல்களை அடுத்து பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். ஏற்கனவே இடம்பெயர்ந்த மக்கள், இந்த அகதி முகாம்களில் தங்கியுள்ளதனால் இங்கு பாரிய நெருக்கடி தோன்றியுள்ளதாக பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

இதேவேளை, சூடானிய அரச படையினரின் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் நைஜீரிய தலைநகரில் இடம்பெற்று வரும் சமாதான நடவடிக்கையை தாம் கைவிடப்போவதாக ஆபிரிக்க மற்றும் மேற்குலக தூதுவர்கள் எச்சரித்துள்ளனர்.

# கொலம்பிய வலதுசாரி ஆயுதக் குழுவின் 550 உறுப்பினர்கள் ஆயுதங்கள் கையளிப்பு!



கொலம்பிய வலதுசாரி ஆயுதக் குழுவின் 550 உறுப்பினர்கள் தமது ஆயுதங்களை கொலம்பிய அரசாங்கத்திடம் கையளித்துள்ளனர். இது அந்த ஆயுதக்குழுவுடன் அரசாங்கம் நடத்திவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஒரு முன்னேற்றம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த 550 ஆயுததாரிகளும் அரசாங்கத்தின் சமாதான ஆணையாளரிடம் தமது ஆயுதங்களைக் கையளித்த பின்னர் சரணடைந்துள்ளனர். இவர்கள் இனிவரும் காலத்தில் சாதாரண வாழ்க்கைக்குச் செல்வார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதக்குழுவின் பிரதான பிரிவு ஹொக்கெயின் போதைப்பொருள் செல்லும் பாதையினைப் பாதுகாத்து தமது அமைப்புக்கான பணத்தை திரட்டி வருவதாக கொலம்பிய படையினர் தெரிவித்தனர். ஆனாலும் ஆயுதங்கள் கையளித்த 550 பேரில் ஒருவரும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருட இறுதிக்குள் இந்த வலதுசாரி ஆயுதக் குழுவினர் தமது அமைப்பிலுள்ள 3000 பேரை கலைத்துவிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அரசியலமைப்பு திருத்தப் பிரேரணை ஜனவரியில் நாடாளுமன்றில் தாக்கல்!

## அரசதரப்பு மும்முரமாக நடவடிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழித்தல் மற்றும் தேர்தல் முறையை மாற்றியமைத்தல் போன்ற விடயங்கள் அடங்கிய அரசியலமைப்புத் திருத்தம், ஜனவரி மாதம் மூன்றாம் வாரமளவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகளில் அரசாங்கத் தரப்பு தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, தான ஜனாதிபதியாக வந்து மூன்று மாதங்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரசாரம் செய்திருந்தார்.

அதாவது பதவிக் காலம் இன்னும் சில மாதங்களில் நிறைவுறவுள்ள அதேவேளை ஐ.தே.க. சார்பிலான அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் என அண்மையில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் - சர்வ அதிகாரமும் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் சட்டரீதியான முயற்சிகளில் ஜனாதிபதி சந்திரிகா தீவிரமாக இறங்கியுள்ளார்.

அரசமைப்புச் சீர்திருத்த வேலைகள் தற்போது மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு முன ஜனவரி மாதம் முதல் வாரமளவில் - அதன் சட்ட வலு குறித்துப் பரிசீலிப்பதற்கு சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்போவதாகவும் ஆளும் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சட்டமூலம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் மட்டுமே நிறைவேற்றப்படலாமாதலால் இந்தச் சட்டமூலத்திற்கு ஐ.தே.க மற்றும் ஜாதிக ஹெல உறுமய எம்.பிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு ஆளும்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழு ஒன்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டும் வேட்டையில் இறங்கியுள்ளது.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்கினாலும், அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு எதுவும் நேர்ந்து விடாத வண்ணம் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புரிமைச் சரத்தும், உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதால் - எதிர்க்கட்சி தமக்குத் தேவையான ஆதரவு நிச்சயம் கிடைக்கும் என்று ஆளும் தரப்பு வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

நடப்பு தேர்தல் முறை மாற்றப்பட்டு ஜேர்மன் முறையிலான தேர்தல், உத்தேச அரசியல் சீர்திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## 'அந்திராக்ஸ்' குறித்து

## நோர்வேத் தூதரகம் தனியான விசாரணை!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இலங்கைக்கான நோர்வேத் தூதரகத்துக்கு அனுப்பப்பட்ட அந்திராக்ஸ் எனச் சந்தேகிக்கப்படும் வெண்ணிறத்தூள் தொடர்பாக - நோர்வேத் தூதரகம் தனியான இரசாயனப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை தூதரகத்துக்கு சந்தேகத்துக்குரிய வெள்ளைத்தூள் அனுப்பப்பட்டதையடுத்து நோர்வேத் தூதரகம் மூடப்பட்டது.

இது தொடர்பாக இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களம் ஆய்வுகளை மேற்கொண்டுவரும் அதேவேளை, நோர்வேத் தூதரகம் தனியான இரசாயனப் பகுப்பாய்வில் ஈடுபடவுள்ளது.

இதேவேளை மூடப்பட்ட தூதரகம் எதிர்வரும் புதன்கிழமை மீளத் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## கத்தோலிக்க தேவாலயம்மீது நேற்று மீண்டும் தாக்குதல்

(கொழும்பு)

ஹோமகமவிலுள்ள சென். மைக்கல் தேவாலயத்தை பௌத்த சிங்கள தேசியவாத சக்திகள் நேற்று அதிகாலை தாக்கிச் சேதப்படுத்தியதாகத் தெரியவருகிறது.

கொழும்பு நகருக்குத் தெற்கே 22 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹோமகமவமில் அமைந்துள்ள இந்தத் தேவாலயமே தாக்கப்பட்டதாகும். இந்தத் தேவாலயத்தின்மீது கடந்த மூன்று மாதங்களுக்குள் நடத்தப்பட்ட மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

இந்தத் தாக்குதலில் தேவாலயத்திற்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தபோதும, அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று தேவாலயப் பங்குத் தந்தை தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் குறித்து கொழும்பு பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் வன்மையாக கண்டித்துள்ளார்.

## டக்ளஸின் வீட்டருகே நடமாடிய இருவர் கைது

கொழும்பு - பம்பலப்பிட்டிப் பகுதியில் உள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லத்தருகே சந்தேகத்துக்கிடமாக நடமாடியதாகக்கூறி இரண்டுபேரை கைது செய்திருப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

லயாட்ஸ் வீதி, அமரசேகர மாவத்தைப் பகுதியில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட இவர்கள் - பலம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரிக்கப்படுவதாகத் தெரிவித்த பொலிஸார் - கைது செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்களை வெளியிடவில்லை.

## பிரஜைகள் குழுத் தலைவரின் வீட்டின் மீது கைக்குண்டு வீச்சு!

மட்டக்களப்பு - காத்தான்குடி 5 ஆம் குறிச்சியில் நேற்று அதிகாலை வீடொன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழ் முஸ்லிம் உறவுகளுக்கான பிரஜைகள் குழுவின் தலைவரான சீனி முகமது இஸ்மாயில் என்பவரின் வீட்டின்மீதே இந்தக் குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

எனினும் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது - அந்தப் பிரதேசத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது.

இவருக்கு கடந்த ஒரு வரு[illegible] காலமாக பொலிஸ் பாதுகா[illegible] வழங்கப்பட்டுவந்த போதும் தற்போது அது விலக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இந்தக் குண்டுவீச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை, தொடர்ந்தும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (01)

## நாட்டின் அடுத்த ஜனாதிபதியை அனுரா தீர்மானிக்க முடியாது!

### நவீன் திஸநாயக்க பதிலடி

நாட்டின் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கவேண்டியது பொதுமக்களே. அதனை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க தீர்மானிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

ஹட்டனில் நேற்று இடம்பெற்ற காமினி திஸநாயக்க நினைவு நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் பேசும் போது -

இந்த நாட்டின் அடுத்த ஜனாதிபதியைத் தீர்மானிப்பது நாட்டின் பொதுமக்களேயாவர். இந்த நிலையில் சந்திரிகா குமாரதுங்க அடுத்த பத்து வருடங்களுக்கு நாட்[illegible] ஆட்சி செய்வார் என அமைச்ச[illegible] அனுரா பண்டாரநாயக்க கூறியிருப்பது பிழையான நிலைப்பாடாகும்.

அடுத்த ஜனாதிபதி யார் என்பதை அவர் தீர்மானிக்க முடியாது. நாட்டின் தேர்தல் முறையின்படி 5 வருடங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவேண்டும். அதனை எவரும் மறுதலிப்பது முடியாத காரியமாகும். அவ்வாறான நிலைப்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இடமளிக்காது எனத் தெரிவித்தார்.

## முறையாக இயங்காததால்...

குற்றஞ் சுமத்தினர். நான் அதை வைபவம் ஒன்றில் கூறவில்லை, பேச்சுவார்த்தை ஒன்றிலேயே கூறினேன்.

நான் அவற்றை மீண்டும் ஒரு முறை கூறமாட்டேன் முன்பு கூறியதை நான் மேலும் உறுதி செய்கின்றேன். ஏனெனில் இந்த நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்க வேண்டும். இதைவிட முக்கியமானது மனிதாபிமானத்தைப் பாதுகாக்க வேண்டும்.

மனிதாபிமானத்தை பாதுகாப்பதில் நீதிமன்றம், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோரே அங்கம் வகிக்கின்றனர்.

இந்த மூன்று நிறுவனங்களும் கடமைகளை செய்யாது இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக நான் அனைவரையும் குறிப்பிடவில்லை. இந்த நிலை தொடருமானால் மனிதன் வாழும் நாடு கால்நடைகள் வாழும் நாடாகமாறும்.

சில இடங்களில் தற்போது இவ்வாறும் நடைபெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசின்...

கொடிகாமத்திலும் நடைபெறவுள்ளது. சாவகச்சேரி பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் வழங்கப்படும் மகஜரை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொழும்புக்கு எடுத்துச் சென்று மொழிபெயர்த்து பத்திரிகைகள் வெளிநாட்டுத் தூதரகங்கள், பொது அமைப்புக்கள் என்பவற்றுக்கு அனுப்பிவைக்கவுள்ளார்.

## மேல்...

புவியோடுகளின் தன்மையானது நில அதிர்வு ஏற்படுவதற்கான தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

எனவே நேற்று ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பாக பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

நேற்று மேல் மாகாணத்தில் ஏற்பட்ட அதிர்வானது இலங்கையை அண்டியுள்ள கடல்பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வின் ஒரு கட்ட தாக்கமாக இருக்கவே வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புத்தூரில்...

துறையினிடமும் பெற்றோர் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடு...

பற்றாலியன் பற்றாலியனாக அமைதிப்பணிக்கென வெளிநாட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது.

20 வருடங்களாகப் போராடி உள்நாட்டில் அமைதியைப் பேண முடியாமல் உள்ள எமது படைகள், வெளிநாட்டில் அமைதியை நிலைநாட்டும் பணிக்குச் செல்லத்தான் வேண்டுமா?

சர்வதேசத்தின் மத்தியில் இலங்கை தொடர்பான ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துவதற்கு மட்டுமே இது உதவுகிறது. எனவே அமைதிப் படையினராக வெளிநாட்டுக்கு இராணுவத்தை அனுப்பப்போவதில்லை.

தம்மிடம் போதிய படையினர் இல்லை என்று களமுனையில் உள்ள இராணுவத் தளபதிகளிடம் இருந்து தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைத்துவருகின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச திணைக்கள...

பணிப்பாளர் லங்காநேசன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பட்டணமும் சூழலும், மூதூர், ஈச்சிலம்பற்று பிரதேச செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களென சுமார் 65 இற்கு மேற்பட்ட அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் -

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கிராமப்புற மக்களின் பங்களிப்பு கூடுதலாக இருக்கின்றது. ஆனால், அவர்களின் வாழ்வு இன்னமும் வறுமைக்கோட்டின் கீழேயே இருக்கின்றது. இதற்காகவே நாங்கள் சண்டையிடுகின்றோம். இதனை நிவர்த்தி செய்யவே சமாதானப் பேச்சுக்களை ஏற்படுத்தியிருக்கின்றோம்.

இன்று போராட்ட பரிணாமம் மாறிவிட்டது. வெளிநாடுகளில் எம்மைப்பற்றிய நன்மதிப்பு கூடிக் கொண்டு வருகின்றது. எங்கள் பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

இது உங்கள் அனைவரதும் கடமையாகும். மாவட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும்.

நகர மாற்றத்தைக் கொண்டு ஒரு சமூகம் முன்னேறியிருக்கின்றது என்று கருதமுடியாது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் மக்கள் இருககிறார்கள். அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். நாடு விடுதலை அடைய வேண்டும். இதற்காகவே பேச்சுவார்த்தை செய்யப்படுகிறது. மக்களின் விடுதலை அவர்களது முன்னேற்ற வாழ்க்கையில் தங்கியிருக்கிறது.

உங்களுக்கென்று சில கடமைகள் இருக்கின்றது. மக்களது நல்வாழ்வு அபிவிருத்தியடைய வேண்டும் இது அவர்களது எதிர்காலத்திலேயே தங்கியிருக்கிறது. இதற்காக நீங்கள் அர்ப்பணிப்புடன் வேலை செய்யவேண்டும். சண்டை நடக்கலாம். பேச்சுக்கள் தொடரலாம். ஆனால் அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (04)

அரிதான சந்தர்ப்பம் !
பக்கம் 2 பார்க்கவும்

## மரண அறிவித்தல்கள்



### நா.மார்க்கண்டு

இளவாலை வசந்தபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நா.மார்க்கண்டு (வலிகாமம் வடக்கு – பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்) நேற்றுக் காலமானார்.

அன்னார் அன்னபூரணத்தின் அன்புக் கணவரும், மலர்விழி (யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவி), கயல்விழி (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய 2005 ஆம் ஆண்டு கலைப்பிரிவு உயர்தர மாணவி), அன்பழகன் (இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய 2006 ஆம் ஆண்டு கலைப்பிரிவு உ/த மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இளவாலை ஆனைவிழுந்தான் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முள்ளான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

ஆனைவிழுந்தான்,
இளவாலை.

தகவல்
மனைவி
அன்னபூரணம்

### சுந்தரலிங்கம் சிவபாலன்

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சிவபாலன் நேற்று ஞாயிறு அகால மரணமானார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவேகானந்த வீதி,
மஞ்சத்தடி,
இணுவில்.

(இ)

தகவல்
றுதாங்கன்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.